(21)

வைத்திய அட்டவணை

317

317

****

குப்புசாமி செட்டியார்,

காவேரிப்பட்டணம்,

வைத்திய அட்டவணை (1)

கட்டு-2. Bundle (2)

****

Total typed Pages 38

Verified

4.4.63

வைத்திய அட்டவணை.-2.

சுவடியின் பெயர் :- வைத்திய அட்டவணை கட்டு.2. தேதி:- 19.2.63.
உரிமையாளரின் பெயர் :- சுப்புசாமி செட்டியார், காவேரிப்பட்டணம்.

****

* இதில் முதல் 20 ஏடுகள் நாடி முறை கூறுவன. அத்துடன் சிதைந்து மிருக்கின்றன எனவே அவைகள் பிரதி செய்யாது விடப்பட்டன!

***

வாத சுர நிதானம் :-

முகம் கறுத்திருக்கும். உதடு உலர்ந்திருக்கும். சரீரம் நோகும். தின வெடுக்கும் உஷ்ணம் போலிருக்கும். உடம்பு பாரிச்சிருக்கும். மலம் கட்டுப் பட்டிருக்கும். குளிர் வரும்.

இதுக்கு மருந்து :-

தழுதாழை வேர், சங்கம் வேர் விஷ்ணுகாந்தி, கடுக்காய்.உய, இது கூட்டி இரு நாழி தண்ணீர் விட்டு யெட்டிலொன்றாய்க் காய்ச்சி குடிக்க வாத சுரம் தீரும்.

பித்த சுரம் நிதானம் :-

நித்திரை வரும். பாயில் கிடைக்கொட்டாது. மூர்ச்சை வரும் போலிருக்கும். விக்கல் எடுக்கிறப் போலே யிருக்கும். சபத்த முண்டாயிருக்கும்.

இதுக்கு கசாயம் :-

கொத்தமல்லி, சதகுப்பி, அதிமதுரம், சுக்கு, வெட்டி வேர், ஆடாதோடை மிளகு, கோரைக்கிழங்கு, கண்ணி முட்டான் கிழங்கு, முசுமுசுக்கை வேர் இந்த ஒன்பது வகையும் சமானமாய்க் கூட்டி யிருழி தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி இறுத்துக் கொடுக்க பித்த சுரம் தீரும்.

சேத்தும சுரம் நிதானம் :-

முகம் வெளுத்திருக்கும். மார்பு நோகும். விக்க லெடுக்கும். இருமல் வரும். எரைப்பெடுக்கும். உடம்பு தின வெடுக்கும். நாவுருசி தெரியாது. சுவாசம் விட்டால் வேர்க்கும். தாக மெடுக்கும். பிடரி நோகும். மேல் சுவாசம் வாங்கும்.

இதுக்கு மருந்து :-

கண்டங் கத்திரி வேர்; சிறுகுறிச்சான் வேர், வெட்டி வேர், சீந்தில் தண்டு சிறு தேக்கு சுக்கு இந்த ஆறு வகையும் சரியாய்க் கூட்டி யிருழி நீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி கொடுக்க சேத்தும சுரம் தீரும்:

அசீரண சுரம் நிதானம் :-

அடிக்கடி எரைப்பு வரும். விக்கலெடுக்கும். மந்தமாயிருக்கும். புளித்த ஏப்ப மெடுக்கும். நெஞ்சு நோகும்.

இதுக்கு மருந்து :-

கண்டங் கத்திரி வேர், சீந்திலான் கொடி, சுக்கு இது சமன் கூட்டி யிருழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி இறுத்து திப்பிலி சுட்டு மேல் பொடி தூவி கொடுக்கவும்.

அதிசார சுர நிதானம் :-

அடிக்கடி வயறு போகும். அதிகமான சுரம் அடிக்கும். சரீர மெல்லாம் நோகும். வேர்க்கும். தாக மெடுக்கும். அலைச்சல் படும். குளிர்ந்த சோறு கேட் பான்.

இதுக்கு மருந்து :-

அதிவிடயம், சுக்கு, கோரைக் கிழங்கு பெரு மரத்துப் பட்டை வில்வ வேர்

மாதுளங் காய் ஒடு இந்த ஆறு வகையும் சமானமாய்க் கூட்டி யீருமி தண்ணீர் விட்டு எட்டிலொரு பின்றுக் கூட்டி காய்ச்சி கொடுக்கவும்.

பூத சுரம் நிதானம்:-

குமர கண்டன் போல வலிக்கும். சுரம் வந்தவுடனே பிரலாபிக்கும். கண்ணை உருட்டி முழிக்கும். தலை மயிரெடுத்திருக்கும். பேருவான் ஆடுவான் நடுக்கல் வரும். பாவும் சோரம் வேண்டியிருக்கும். நித்திரை வரும். இது அசாத்தியமானது.

தொந்த சுரம் ஆறு வகை எனப்படும். அது யாதெனில் வாத பித்த தொந்த சுரம், பித்த சேத்தும தொந்த சுரம், பித்த வாத தொந்த சுரம், சேத்தும பித்த தொந்த சுரம், சேத்தும வாத தொந்த சுரம் இந்த ஆறு வகையும் அறிந்து கொள்ளவும்.

இருகத்தும கசாயம்:-

சீந்தில் தண்டு, கோரைக் கிழங்கு, சித்தா முட்டி வேர், சுத்தன் குறும்பை, நில வேம்பு, கடுக்காய், சுக்கு, பேய்புடல், கஞ்சாங் கோரை இந்த ஒன்பது வகையும் சரியாய்க் கூட்டி யீருமி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் கஞ்சி கொடுக்க தொந்த சுரம் தீரும்.

சுரம் விடுகிற நிதானம்: வாதசுரத்துக்கு எ நாள். பித்த சுரத்துக்கு 6 நாள். தொந்த சுரத்துக்கு பத்து நாள் சேத்தும சுரத்துக்கு 9 நாள் இந்த கெடுவு படி அஜீர சுரம், அதிசார சுரம், பத சுரம் இந்த ஆறு வகைக்கும் கெடு வில்லை நவ சுரங்களை ஐந்துக்கும் திவிந்தம் கொடுப்பது. ~~தொக்~~

இதுக்கு காசயம்:-

முத்தக்காசு, பற்படாகம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், சுக்கு, சந்தனம் இந்த ஆறு வகையும் சரியாய்க் கூட்டி யீருமி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி கொடுப்பது தாபசுரம் தீரும்.

சன்னி வாதசுரத்துக்கு கசாயம்:-

சீந்தில் தண்டு, ஆடாதோடை யீர்க்கு, நிலவேம்பு, பற்படாகம், சுக்கு, சிறுகாஞ் சொரி வேர், சித்தாமுட்டி வேர் இது வெல்லாம் கூட்டி பதக்கு நீர் விட்டு நாழியாக காய்ச்சி கொடுக்க சன்னி வாதம் தீரும். இப்படி அறிந்து கொடுக்கவும்.

லிங்க சுத்தி, அவிழ்த சுத்தி, ருத்த சுத்தி, நாபி சுத்தி:- (சுத்தி விவரம் not required)

சாதிலிங்கத்தை தண்ணீர் வார்த்தரைத்து அடை போல் தட்டி சிறு கலசத்தில் பசுவின் பால் வார்த்து வேடு கட்டி அதின் மேல் சட்டியால் மூடி சீலை மண் செய்து பிட்டு போல வேக வைத்து எடுக்க சுத்தியாம். எலி பாஷாணம் சுணியில் முடிந்து பானையில் சுண்ணாம்பு கல் போட்டு குறுணி தண்ணீர் விட்டுக் கரைஞ்ச பின்பு அத்திறமாகட்டி எரிக்க சுத்தியாம். ரத்தம் காடியிலும் எலுமிச்சம் புளியிலும் கழுவ சுத்தியாம். நாபியை ஒரு குடுவையில் போட்டு கோமியம் விட்டு அதில் பொன்னாங்காணி சிறு கீரை இது அரைத்து பானையில் தண்ணீரில் கரைத்து பானைக்கு வேடு கட்டி பிட்டுப் போல் சுட சுத்தியாம். பிறகு பசுவின் பாலில் இதை அரைத்து நெருப்பில் சுட சுத்தியாம்.

கெந்தக சுத்தி:-

கெந்தகம் பானையில் ~~எருமை~~ மோர் இரண்டு படி விட்டு பொன்னாங்கன்னியும் சிறுகீரையும் இடித்து பானையில் போட்டு வொரு பானைக்கு வேடு கட்டி அதின் மேல் அரைத்த விழுதை வைத்து மேலே கெந்தகம் வைத்து மேல் சட்டி மூடி எரியிட சுத்தியாம்.

வாள சுத்தி:-

வெண்காரம், ~~சுத்~~ எருமை சாணியில் கழுவி கரண்டியில் எரித்தால் சுத்தியாம். அரிதாரம் பானையில் யீருமி பசும் பால் விட்டு வேடு கட்டி பொன்னாங்கன்னி சிறு கீரை அரைத்து பிட்டு போல் சுட சுத்தியாம்.

ரசம் சுத்தி:-

ஒட்டறை செங்கல் தூள், மஞ்சள் தூள், கத்தாழை இதுகளிலே தனி தனியா

மற்திக்க சுத்தியாம். நேர்வாளம் துணியில் முடிந்து சாணி கரைத்து அதிலே சாமம் வேகப் போட்டு எடுத்து பருப்பைப் போக்கி இலையை வாங்கிப் போட்டு பிறகு சுத்கர்மை சோத்தில் வேக பேர்ட்டு எடுத்து / அதின் பிறகு சில் நீரையில் வேக வைக்க சுத்தியாம்.

மனோசிலை சுத்தி:-

பொன்னாங்கன்னி, சிறுநீரை இடித்து பிழிந்து பசும் பாலும் கூட்டி பானையில் விட்டு அத்திறமாக எரிக்க சுத்தியாம்.

சன்னி வாத கோரி தயிலம்:-

வேப்ப முத்து சத்ப்ப கண்டம், மிளகு, திப்பிலி, வசம்பு, சதாகுப்பி, சிக்கரத்தை, பச்சை பாம்பு கண்டம், சுடுகுரோகணி, வட்டத் திருப்பி வூசி மல்லிகை, மலைமஞ்சு, நன்னி முட்டான் கிழங்கு, கோரோசினை கிரும்பு, குங்கிலியம், நிலவேம்பு, நிலக் கடம்பழ் சிரன்டை, உடாமைடை காட்டெருமை பால், தேவதாரி, எருக்கிலை, சார் நாழி இதில் மருந்தெல்லா மரைத்து நல்லெண்ணை நாழி வேப்பெண்ணை நாழி கூட்டி பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு அரைக் கறண்டி சாப்பிடவும்.

இதில் தீரும் வியாதி வாத சன்னி, வாத சுரம், சோபை, விஷ பாகம், அக்கி சன்னி மலட்டு சன்னி, ருத்திரங்க சன்னி, மேக சன்னி இதுகளுக்கெல்லாம் மேலுக்கும் பூசவும் தீரும்.

மாத்திரை:-

சாதிக்காய், சாத்திரி, லவங்கம், ஏலம், திப்பிலி, மிளகு, அதிமதுரம், வாய்விளங்கம், சுக்கு, செர்ப்பு பொள்ளு இலை, கடுக்காய், மோடி சீரகம், தானிக்காய், கருஞ்சீரகம், மலை தாங்கி, புளியங் கொட்டை, மேல் தோல், இல்வம் பிஞ்சி விளாம் பிஞ்சு வாழைப்பு, அரும்பு, நாகக்கொட்டை தென்னம் பூ, வேலாம் பட்டை, மாம்பட்டை, நாகப்புட்டை, அரசம் பட்டை, அத்திப் பட்டை, ஆளான் விருதை இது வகைக்கு விராகனிடை.க இது வெல்லாம் கூட்டி எருமைத் தயிரில் அரைத்து ஏழு புடம் அரைத்து வைக்கவும். இது வெல்லாம் புளியங் கொட்டை மாதிரி உருண்டை பண்ணி நிழலில் லர்த்தி வேப்பம் பட்டை, மாம்பட்டை, நாகப்பட்டை, அத்திப் பட்டை இது நாலும் கசாயம் வைத்து அதில் ஒரு விராகனிடை வைத்து இரண்டு வேளை சாப்பிடவும். பசறும் நிற்கும். தயிரும் சோறும் சாப்பிடவும்.

மார்நோவு, சுவாச காசம், வாத க்ஷயம், விக்கல் இருமலுக்கு லேகியம்:-

வில்வப் பட்டை இடித்து ஆள் பலம்.ஙய, இதை ஒரு பானையில் போட்டு நாலு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டி லொன்றுய் காய்ச்சி வடித்துக் கொண்டு அந்த கசாயத்தில் பழைய பனை வெல்லம் பலம்.ஙய கரைத்து வடிகட்டிக் கொண்டு இளம் பதமாக காய்ச்சி அந்த பதத்தில் கடைசரக்கு சுக்கு மேல் தோல் சீவி, போட்டு பலம்.ஙு, கொடி வேலி பலம்.க, திப்பிலி பலம். செவியம் பலம். தாளிச பத்திரி பலம். சிறுநாகப்பு பலம். திப்பிலி மூலம் பலம்.உ ஏலம் காசிடை. லவங்கம் காசிடை. லவங்கப் பத்திரி காசிடை. பலம் சீரகம் பல்.க கருஞ்சீரகம் பலம்.க ஆக பதி மூன்று வகை அரைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் கசாயத்தில் கலந்து பதமாக காய்ச்சி லேகம் பக்குவமாய் எடுத்துக் கொண்டு தானிக்காய் பிரமாணம் கொள்ளவும்.

இதில் தீரும் வியாதி உறை குலை வாதம், க்ஷயம், பயித்தியம் சுரம், விக்கல், இருமல், சுவாச காசம், மார்நோவு வாய்நீர் பாச்சல் சத்தி குன்மம், வாந்தி அஜீரணம் இது வெல்லாந் தீரும்.

சுரக் குளிகை:-

கெவுரி பாஷாணம் விராகனிடை.க, வெள்ளை பாஷாணம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, தேத்தான் கொட்டை விராகனிடை.க, நீர் புங்கம் கொட்டை விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, கடுக்காய் விராகனிடை.க, உத்தாமணி வேர் பட்டை விராகனிடை.க,

இது வெல்லாம் கூட்டி குப்பை மேனி சார் விட்டு ஒரு சாமமரைத்து சிறு பயறு பிரமாணம் குளிகை செய்து இஞ்சி சாத்திலாவது சுக்கு கசாயத்திலாவது கொடுக்க சுரம் எனப் பட்டதெல்லாம் தீரும். இதக்கு பத்தியம் துவரம் பருப்பு, முருங்கைக்காய், மிளகு, நீராகும். உப்பு, புளி விடவும். விஷத்துக்கு குப்பை மேனி சாத்தில் கொடுக்கவும். விஷம் தீரும்.

சன்னிக்கு எண்ணெய் :-

ஆடாதோடை, சிறு சிறுப்பை, ஏலம், கோஷ்டம், அதிமதுரம், சீரகம், கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு, முலைப்பால் உழக்கு முசுரு முட்டை. இது வெல்லாம் ஐந்தெண்ணையில் போட்டு காய்ச்சி வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கு பூசவும். அதின் பிறகு சின்னப் பொட்டணம் கட்டி காய்ச்சி ஒத்தடம் போடவும் சன்னி தீரும்.

முசுரு முட்டை கொண்டு வந்து முலைப் பாலில் பிசைந்து புழிந்து சட்டி காய வைத்து அதில் மணல் போட்டு வருத்து கொ----- போட்டு அந்த பாலை ஊத்தி இறுத்துக் கொடுக்க சன்னி தீரும். அலட்டு சன்னி நெல்லு மருதாள வேரும் முசுருமுட்டை விராகனிடை. க கூட்டி அரைத்து மூன்று நாள் குடிக்க அலட்டு சன்னி தீரும். இத் கை கண்டது.

கழிச்சலுக்கு கட்டு மாத்திரை :-

இலை கடுக்காய், பிஞ்சு கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், சொம்பு யிசுப்பு ஜெலபொஸ்து காய். இது அரைத்து கசாயம் காய்ச்சி காசுக் கட்டி கொட்டைப் பாக்கு இது இரண்டும் கூட்டி கசாயம் வைத்து அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அந்த கசாயம் கொடுக்க கட்டு படும். நாயுருவி முதல் கொண்டு ஒரு வீசை நிறுத்து கத்தரிச்சு ஒரு பானையில் போட்டு கருக்கி மிளகு பலம். உ, வெள்ளை சாட்டறனை வேர் பலம். ந, வசம்பு பலம். க இது மூன்றும் கருக்கி போட்டு கூட வெந்திலைக்கு சுண்ணாம்பு நடவி கூடப் போட்டு குறுணி தண்ணீர் வார்த்து நாழியாக காய்ச்சி மூன்று நாள் குடிக்க கிறுணி கழிச்சல் போகும்.

பஞ்ச மூல கசாயம் :-

சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், மை பாலை வேர், சீந்திலா கொடி முள்ளி வேர், விசதி வேர், பயிறகாலி வேர், ஆடாதோடை ஊசி தகரை கடம்பல கோரை கிழங்கு வெள்ளறுகுவில்வ பத்திரி வேர், நிலவேம்பு கரிசிலாங் கன்னி உத்தாமணி வெள்ளை சாறனை குப்பை மேனி காஞ்சொரி செலை முரிஞ்சான் கரு நொச்சில் சுனக்கன் வேர், சிறு குறுஞ்சான் கன்னி காவாளை சுனை காவாளை முளகுனை முக்காவாளை முள்ளு சுண்டை கூடை கட்டி வேர் சிவனார் வேம்பு கஞ்சாங் கோரை நாய் விலா முசு முசுக்கை குமிளம் வேர், சாட்டறணை வேர், வட்ட திருப்பி வட்டக் சிறு சிறுப்பை, வெள்ளை வேல், பேய்புடல் கீழா நெல்லி, நீலி வேர், முருநெல்லி வேர், வச்சிற நீலி பற்படாகம் விஷ்ணுகாந்தி, அம்மா பச்சரிசி நிலாவரை முக்கதாரி நரிப் பயத்தன் நெல்லி முள்ளி தும்பை பன்னை எலுமிச்சம் வேர், புன் முருங்கை காய் பத்திரி, குமட்டி மூக்குறட்டை துத்தி சிறுகீரை இந்த அறுபத்துநாலு வகையும் வேரும் கூட்டி கத்தரிச்சு ஒரு பானையில் போட்டு ஆறு வெல்லம் தண்ணீர் விட்டு படியாக காய்ச்சி இறுத்துக் கொண்டு கூட சரக்கு பறங்கிப் பட்டை பிறப்பங் கிழங்கு, சாதிக்காய், சாபத்திரி, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, மோடி சுக்கு, திப்பிலி தம்பருஷ்டகம், கொத்தமல்லி, வாய் விளங்கம் கோரோசினை பெருங்காயம் கொண்டு பறங்கி மிளகு, சீரகம், ஓமம், கருஞ்சீரகம், அக்கல்காரம், கோஷ்டம் இந்த அறுபத்திநாலு வகையும் சூரணம் பண்ணி சாப்பிடவும். இல்லா விட்டால் லேகம் பண்ணி சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி அறுபத்து நாலு வகை வியாதி யும், முப்பத்திரெண்டு வகை கிறணியும், குஷ்டம் பதினெட்டு வகை பிறமியம் இருபத்தொரு வகை மேகம் எட்டு வகை குன்மமும் ஐந்து வகை சூலையும் தீரும்.

மிக பச்சலி குளிகை :-

ரசம் விராகனிடை. க, வெங்காரம் விராகனிடை. க, நேர்வாளம் விராகனிடை. க, சுக்கு விராகனிடை. க, மிளகு விராகனிடை. ந, புளியம் பட்டையில் சங்கு பற்பம் பண்ணி அந்த பற்பம் விராகனிடை. இது வெல்லாம் கூட்டி மீன் பிச்சிலரைத்து குன்றி மணி

கிஞ்சி சாற்றிலாவது முலைப்பாலிலாவது கொடு சுரம் தீரும். கடும் பத்தியம்.

~~சிகிச்சை குளிகை பண்ணி இஞ்சி சாற்றிலாவது பாலிலாவது விட சுரம் தீரும். பத்தியம் கடுசா இருக்கவும்.~~

<u>கால், கை எரிச்சலுக்கு எலும்புருக்கிக்கு</u> :-

வெள்ளை பாஷாணம், வசம்பு, பூத கரப்பான் பட்டை உள்ளி நல்லெண்ணை இருநாழி, இது இடித்து சூரணம் எண்ணையில் போட்டு பொன்னிறமாக காய்ச்சி வடித்து காலமே முகம் கழுவி எண்ணை சாப்பிடவும். காலெரிவு வாங்கும்.

<u>எலும்புருக்கிக்கு மருந்து</u> :-

திப்பிலி பலம்.க, இஞ்சி துட்டெடை ஐந்து நாள் சாப்பிடவும். எலும்புருக்கி தீரும்.

<u>சர்வாங்க குளிகை</u> :-

கடுக்காய் விராகனிடை.க, சித்திர மூலம் விராகனிடை.ச, சுக்கு விராகனிடை.ச திப்பிலி மூலம் விராகனிடை.ச, கோரைக் கிழங்கு விராகனிடை.ச, ஏலம் விராகனிடை.உ, செவியம் விராகனிடை.உ, சிறுநாகப்பு, விராகனிடை.உ, ஓமத்தம் விரை விராகனிடை.உ, இது வெல்லாம் கூட்டி இஞ்சி சாறு விட்டு அரைத்து சிறு பயறு பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சி சாத்திலாவது சுக்கு கசாயத்திலாவது கொடுக்க வியாதி தீரும். மத்த வியாதிகளுக்கு அதுக்கேற்ற கசாயத்தில் கொடுக்கவும். பத்தியம் ~~கடுசா இருக்கவும்~~.

<u>அக்கினி குமார மாத்திரை</u> :-

ரசம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, இது கூட்டி எருக்கம் பால் விட்டு அரைத்து குளிகை பண்ணி புத்து மண் செரணித்துவம் ~~கொள்ளு பாக்கு~~ உமிக் காந்தல் இது மூன்றும் அரைத்து குளிகை பண்ணிக் காய வைத்து அதில் இந்தக் குளிகை வைத்து சீலை மண் செய்து ஒரு சட்டியில் மணல் போட்டு அதின் நடுவே வைத்து சட்டியிட்டு மூடி மண் கட்டி அடுப்பு மேல் வைத்து முப்பது நாழிகை எரியிட்டு அதின் பிறகு எடுத்து பரணியில் வைத்துக் கொண்டு சன்னி வாத ரோகங்களுக்கு எந்த வகை கசாயத்திலும் இடலாம். பத்தியம் கடுசா இருக்கவும்.

மந்திரக் ~~<u>சன்னி வாத வலிகள்</u>~~ :- சன்னிவாத வலிக்கு

ரசம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, அரிதாரம் விராகனிடை.க, மனோசிலை விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, இது வெல்லாம் சுத்தி பண்ணி சித்திர மூல கசாயத்தில் ஒரு நாளரைத்து எலுமிச்சம் புளியிலரைத்து, இஞ்சி சாற்றில் ஒரு நாளரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி வந்த கசாயத்திலும் கொடுக்கலாம். சன்னி வாத சுரம் தீரும். இதுக்கு பத்தியம் அவரை முருங்கைக்காய், மிளகு நீர் உப்பில்லாமல் கூட்டவும்.

<u>வாத ராட்சதன் குளிகை</u> :-

ரசம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, குருசானி ஓமம், கடுக்காய் தானிக்காய் நெல்லிமுள்ளி, சந்தி பாஷாணம், நவச்சாரம், சித்திரமூலம் இந்துப்பு சீரகம் வாய் விளங்கம் வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி எட்டிக் கொட்டை இது வகைக்கு விராகனிடை.க இது வெல்லாம் கூட்டி எலுமிச்சம் புளியிலரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி எந்த கசாயத்திலும் கொடுக்கலாம். இதுக்கு உப்பு, புளி விடவும்.

ரசம் நாபி, கெந்தகம், லோக பற்பம் இது வகைக்கு விராகனிடை.க, அத்திப் பட்டை விராகனிடை.ச இது வெல்லாம் கூட்டி செருப்படை சாத்திலரைத்து மூன்று நாளரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி மூசை பண்ணி அதிலிட்டு சீலை மண் செய்து பானையில் போட்டு வைத்துக் கொண்டு இஞ்சி சாத்திலிட சகல சுரம் தோஷங்கள் எல்லாம் தீரும். இதுக்கு உப்பு, புளி விடவும்.

பசுவின் பால்.உ, உள்ளி ஒரு சேர் பச்சரிசி நொய் ஒரு சிறங்கை இதை பாகமாக காய்ச்சி மூன்று வேளை சாப்பிடவும் சன்னி தீரும்.

சன்னி பிற இழுப்புக்கு:- 20.2.63.

நொச்சிலை இலையும் பட்டையும் ஒரு வீசை நக்கரிச்சு பானையில் போட்டு பதக்கு தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சி இவ் கரிசிலாங் கண்ணி ரசம் நாழி விட்டு நல்லெண்ணை நாழி விட்டு பகமாக காய்ச்சி வடிக்கு மேலுக்கு தடவி பிடிக்க சன்னி வாதம் பிற இழுப்பு நிற்கும். இதுக்கு பத்தியம் சுக்கு, மிளகு, திப்பிலி வறுத்துப் பொடி பண்ணி சோற்றில் தூவி நெய் கூட்டிக் கொள்ளவும். உப்பு, புளி விடவும்.

சன்னிக்கு கலிக்கம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், பெருங்காயம், நேர்வாளம் இது வகைக்கு விராகனிடை.க இது வெல்லாம் கூட்டி எலுமிச்சம் புளியில் விட்டு அரைத்து வெப்பங் கொட்டை மாதிரி குளிகை பண்ணி வென்னீரிலுரைத்து கலிக்க மிடவும் சகல சன்னியும் தீரும்.

சன்னிக்கு முலைப்பால் தயிலம்:-

சிறுகீரை பொன்னாங்கண்ணி, முக்காவாளை, முடப்பம் வேர், விழுதி இலை காந்தி, அவரிவேர், வட்டத் திருப்பி வேர், ஆடாதோடை இலை, ஆதண்டன் இலை இது வெல்லாம் சமதை கூட்டி பதக்கு நீர் விட்டு படியாக காய்ச்சி வடிக்குக் கொண்டு, ஏலம் லவங்கம் அதிமதுரம், செங்கனி கோஷ்டம், கண்டு பாரங்கி மோடி, சாதிக்காய், திப்பிலி, திப்பிலி மூலம், சிறு தேக்கு, சீரகம், கருஞ்சீரகம், சதாகுப்பி, சாஸ்திர வேதி இது வகைக்கு விராகனிடை.க, குன்னி வேர் இலையும் இது வெல்லாம் கூட்டி விளக்கெண்ணை ஒரு படி முலைப்பால் படி. இது வெல்லாம் முன் தயிலத்தில் விட்டுக் கொதிக்க விட்டு மறு நாள் வடித்து திப்பிலி மேல் பொடி தூவி வைத்துக் கொண்டு குழந்தைகளுக்கும் பிள்ளையுண்டான பெருக்கும் நாள் சென்ற ஒட்டுக் காச்சல் விடாத சுரத்துக்கு அஸ்தத்தில் பத்தின் சுரத்துக்கு விட்டு விட்டுக் காயிற சுரத்துக்கும் உள்ளுக்கு கொண்டு மேலுக்கு பூசவும். தீராத சுரமெல்லாம் தீரும். இந்த தயிலக்கோடே செங்கழு நீர்க் கிழங்கு, முடப்பம் வேர், கோரோசனையும் கூட்டி பொடி பண்ணி கலந்து வைத்துக் கொண்டு கொடுக்கவும். இது நல்ல பிரயோக தயிலம்.

நிலாவாரை நிலவேம்பு ஆடு தின்னா பாளை, வெள்ளருக்கு சமூலமும் கொடிவேலி வேர் பட்டை, சிறு கிளாக்காய் வேர் பட்டை விளா வேர் பட்டை மிளகறணை வேர்ப் பட்டை, முக்கதாரி வேர் பட்டை, நாவல் வேர் பட்டை, குட்டிப் பலா வேர்ப் பட்டை, குருஞ்சான் வேர் பட்டை, சங்கம் வேர்ப் பட்டை மருளுமத்தம் வேர் பட்டை இது வெல்லாம் கூட்டி உலர்த்தி பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி வென்னீரில் கொடுக்க சன்னி வகையெல்லாம் தீரும். இதுக்கு இச்சா பத்தியம் பண்ணவும்.

பாலந்த சன்னிக்கு மருந்து:-

உள்ளி சேர்.உ, திப்பிலி பலம்.க, மோடி பலம்.க, மிளகு பலம். சீரகம் பலம்.உ தம்பருஷ்டகம் பலம். ., நாகேசுரம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.வ, ஓமம் பலம். கடுக்காய், பலம். , திப்பிலி மூலம் பலம். பெருங்காயம் பலம்.வ, வாய் விளங்கம் பலம். மஞ்சூரம் பலம்.வ, தேன் சேர்.க, சர்க்கரை சேர்.உ, தேன் சர்க்கரை போட்டு அதி ரச பதமானவுடனே முன் சூரணம் போட்டு மூடி ஒரு ஆவி வந்த பிறகு களி போல் கிண்டி லேக பதமாய் எடுத்து தினம் களிப்பாக்கு மாதிரி கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி குகை சன்னி, இது வெல்லாம் தீரும். கெற்ப சன்னி அதிக சன்னி அறை சன்னி வதிற சன்னி இது வெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

குக சன்னிக்கு:- சாதிக்காய் விராகனிடை.க, லவங்கம் பலம்.வ, சித்திர மூலம் பலம்.

மாவிலிங்கப் பட்டை, சிறுகாஞ்சொறி, பேய்ப்புடல், சுக்கு இவை கசாயம் வைத்து கொடுக்க சுக சன்னி தீரும். ஜவும் உள்ளம் மாவும் உரல் வெண்ணெயில் வேக வைத்து இறக்கி பனியில் வைத்து காலமே சாப்பிட சுக சன்னி தீரும்.

மச்ச_கெந்தி_வாய்வுக்கு:-

கருதாமரை இலை, பெருங்குருஞ்சான் இலை கரு நொச்சி இலை, ஊமத்தை இலை கரியுமத்தின் இலை, கரிசிலான் கண்ணி இலை, சாம்பிராணி இலை, உத்தாமணி இலை, குப்பமேனி இலை, வெள்ளை இலை வெள் சாட்டறணை இலை, வாத நாராயண இலை ஆக வகை. சரியாய் பசரு வகை வாங்கி அதில் கடை செவ்வு மிளகு பலம். திப்பிலி பலம். மோடி பலம். மட்டி மொக்கு பலம். லவங்கம் விராகனிடை.ங, சாதிக் காய் விராகனிடை.ங, பெருங்காயம் விராகனிடை.ங, வெள்ளை பூண்டு பலம்.உ, வாய் விளங்கம் பலம். பறங்கி பட்டை சேர்.கு, இது வெல்லா மரைத்து பசருலே கலந்து பழைய கேவுரு மாவி கூட்டி களி கிளறி சூரிய புடத்தில் வைத்து உடம்புக்கு கட்டி னால் எல்லா நோவும் தீரும். இப்படி எட்டு நாளைக்கு ஒரு தரம் இந்தபடி செய்யவும். உள்ளுக்குக் கொள்ளவும்.

சகல_வாய்வுக்கு_தயிலம்:-

சித்தா முட்டி வேர், பேரு முட்டி வேர், விழுதலை வேர், கண்டங் கத்திரி வேர், நெருஞ்சி வேர், வில்வ பத்திரி வேர்ப் பட்டை நொச்சி வேர், அமுக்கிரான் கிழங்கு; சித்திர மூலம், சாறணை வேர், தேவதாரி வேர், நன்னாரி வேர், களற விழ பட்டை அயில் பட்டை முக்ககாரி பட்டை, கருதாமரை வேர், தாமரை வளை முக்கா வாளை உருந்து நாழி இது கசாயம் வைத்து இரண்டு வள்ளம் தண்ணீர் விட்டு எட்டிலொன் றாய் காய்ச்சி இறுத்துக் கொண்டு பசுவின் பால் நாழி விட்டு தயிலம் போல் காய்ச்சி இதில் சுக்கு, திப்பிலி, மிளகு, கோஷ்டம், அதிமதுரம், சடாமாங்கிஷம், கஸ்தூரி மஞ்சள், சயிந்த லவணம், சன்னக கறம், சந்தன கட்டை, வசம்பு, சதாகுப்பி வெட்டி வேர், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறு நாகப்பூ, கஸ்தூரி, குங்குமப் பூ கோரோசினம் இது வகைக்கு விராகனிடை. இது மூன்று கிரசும் நிறுத்தி குன்றயாவதும் இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் தயிலம் போட்டு என்ணெ படி விட்டு காய்ச்சி அதின் பிறகு சூரணம் போட்டு என்ணெ படி விட்டு பக்குவமாய் காய்ச்சி வடிக்கக் கொண்டு மத்த நாள் ஒரு கரண்டி உள்ளுக்கு கொள்ளவும். எந்த வாய்வும் தீரும். பத்தியம் கடுசா இருக்கவும்.

கால்_கை_பிடிப்புக்கு:-

கழற விரா ஆவரை ஊசி கொட்டலாவது அதின் வேர்ப் பட்டை கொண்டு வந்து நறுக்கி ஒரு பானையில் போட்டு குறுணி தண்ணீர் விட்டு படியாக காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும் பத்தியம் உப்பு புளி விடவும். பத்தியம் மூன்று நாள் இருக்கவும்.

வாய்வுக்கு_லேகியம்:-

நொச்சி வேர் பலம்.ருய, வாத நராயணன் பட்டை பலம்.ருய, விழுதி வேர் பட்டை பலம்.ருய, காவாளை வேர் பட்டை பலம்.யஉ; முரு நெல்லி வேர் பலம்.உ॥ சிந்தாந்தி பட்டை பலம்.ய, சாட்டறணை வேர் பலம்.யரு குப்ப மேனி பலம்.ரு ஆதண்டன் வேர்ப் பட்டை பலம்.உய ஆக வகை ஒன்பதுக்கு பலம்.உள கூட்டி ஒரு மொடாவில் போட்டு எட்டு மரக்கால் நீர் விட்டு ஏழரை சாமம் எரிவிட்டு குறுணியாக காய்ச்சி இறுத்துக் கொண்டு கடை திரசு திப்பிலி பலம்.க, கிராம்பு பலம். அசம தாகம் பலம்.க, வாலுளுவை அரிசி பலம்.க, சுக்கு பலம்.க, வாய் விளங்கம் பலம்.க செவியம் பலம்.க, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, அதிமதுரம் பலம்.க, கடுக்காய் பலம்.க, தானிக்காய் பலம் கொண்டு பறங்கி பலம். , ஏலம் பலம்.வ, லவங்கப் பட்டை பலம்.வ, லவங்கப் பத்திரி பலம். திப்பிலி மூலம் பலம். அக்கலகாரம் பலம்.

செங்கல் கோஷ்டம் பலம். ½ கருஞ்சீரகம் பலம்.க, இலை கடுக்காய் பலம் ஒன்றுக்கு குரோசானி ஓமம் பலம், கோரோசனம் பலம்.வ, சடாமாஞ்சில் பலம்.க, பறங்கிப் பட்டை பலம்.ய இது எல்லாம் இடித்து சூரணம் பண்ணி முதல் தயிலத்தில் போட்டு தேன் சேர்.ங, சர்க்கரை சேர்.ங, பசுவின் நெய் சேர்.ங இது கூட்டி லேகியம் பண்ணி சாப்பிடவும். இதில் தீரும் வியாதி வாய்வும் போகும். பாக்கு பிரமாணம் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

வாத முதலானது:-

நொச்சி வேர் கொண்டு வந்து பானையில் போட்டு தயிலம் வாங்கி இதில் திப்பிலி சிறும்பு, அசமதாகம் வாலுளுவை அரிசி உள்ளி இவை ஒன்றுக்கு பலம்.ங இது எல்லாம் இடித்து சோதிச்சு முன் தயிலத்தில் போட்டு லேகியம் செய்து புளியங் கொட்டை பிரமாணம் கொள்ளவும். வியாதி தீரும். வாத குன்மம், பித்த காமாலை, குளிர், வெளுப்பு, பார்வை, வயத்து வீக்கம் சந்து வாதம் இது எல்லாம் தீரும்.

கை கால் முடங்கினதுக்கு:-

பீசன் கொட்டை இலையும் கருப்பு மணக்கத்தை அரிசி மாவிடித்து பிட்டு சுட்டு நல்லெண்ணை வார்த்து தின்னவும். பீசம் வேர் கொண்டு வந்து இழைச்சு இரண்டு பலம் கூட்டி நல்லெண்ணை ஒரு பலங் கூட்டி பிசைந்து சூரிய புடமிட்டு சருவாங்கமும் பிடிக்க முடங்கின வாதம் நிற்கும்.

கிறந்தி புண்ணுக்கு சூலைக்கு:-

சூலையானால் விளக்கெண்ணை நாழியில் அந்து பிரகாரம் பண்ணி உள்ளுக்கு கொடுக்கவும். மேலுக்கு பிடிக்கலாம். பத்தியம் கடுசாயிருக்கவும். மாவிலங்கன் இலை அரைத்து கெச்சக்காய் பிரமாணம் வெந்நீரில் குழப்பி உள்ளுக்கு கொடுக்கவும். இந்தபடி மூன்று நாள் ஆறு பொழுது இரண்டு வேளையும் கொடுக்கவும். பசுவின் பால் சேர் கூட்டிக் கொள்ளவும். கிறந்தி தீரும்.

சூலைக் கட்டுக்கு:-

சீதா செங்கழனி நீர் அரைத்து பாக்கு பிரமாணம் இதில் இத்துடன் கூட ஆறு பணவிடை ரசம் விட்டு அரைத்து பன்னிரண்டு குளிகை செய்து ஆறு நாள் சாப்பிடவும். மருந்து சாப்பிட்டவுடனே புகை பிடிக்கவும். பத்தியமில்லை பழையது சாப்பிடலாம். குளிர்ந்த தண்ணீர் ஆகும். சீலை பண்டமாகும். ஒன்பது நாள் நல்லெண்ணை தேய்ச்சு முழுகவும். காங்கையானால் பசுவின் நெய் கூட்டவும். மருந்து சாப்பிடுகிற போது பால், மோர் தள்ளவும். சூலைக் கட்டு தீரும். ஆறு பிராயத்து பிள்ளைகளுக்கு முக்கால் பணவிடை அதிலும் சிறு பிள்ளைகளுக்கு அரை பணவிடை கொடுக்கவும்.

மிளகு ஒரு பிடி, வெள்ளை வெங்காயம் ஒரு பிடி, கோழி முட்டை இரண்டு அதில் வெள்ளை கருவெடுத்துக் கொண்டு நல்லெண்ணை படி.க இது அரைத்து எண்ணையில் கலந்து சாப்பிடவும். உப்பு, புளி விடவும்.

சூலை வாய்வுக்கு எண்ணெய்:-

விளக்கெண்ணை படி.½ வெங்காயம் பலம்.9 இதை ஐந்து எண்ணையில் போட்டு அதின் பிறகு வெள்ளரி விரை அரைத்த சாந்து மாதிரி பூரகம் விளாங்காயி மாதிரி இது எல்லாம் எண்ணையில் போட்டு பதத்தில் எரித்து பதம் வருகிறதற்கு முன்னே வெங்காரம் பொரித்துப் போட்டு பதம் பார்த்து எண்ணை இறக்கி- அரைத்துக் கொண்டு முதல் நாள் விளக்கெண்ணை தேய்ச்சு முழுகவும். மறுநாள் எண்ணை குடிக்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும். புகையாகாது. இந்தப்படி பத்து நாளைக்கு ஒருக் கால் மூன்று முறை கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி விடவும். புகையாகாது. இந்தப்படி பத்து நாளைக்கு ஒருக்கால் மூன்று முறை கொடுக்கவும். இதில் தீரும் வியாதி வெள்ளை நீர்க் கட்டு அடைப்பு சூலை வாய்வு தீரும்.

நீர் கடுத்து விழ சுரத்து நீரடைப்புக்கு :-

மிளகு பலம். ½ சர்க்கரை பலம். ½ அரைக்கால் படி நல்லெண்ணை கால்படி மிளகு பொடி பண்ணிப் போட்டு சர்க்கரை கூடப் போட்டு ஏகமாய் கலந்து கொடுக்கவும். எரிவு கண்டால் முருங்கையிலை வேக வைத்து அரைப்படி தண்ணீர் குடிக்கவும் தீரும். பேயன் வாழைப் பூ ½ ஆவும் ரஸ்தாளிப் பழ வாழைப் பூ ½ வாவும் இடித்துச் சாறு பிழிந்து திப்பிலியும் கூட அரைத்து பசும் பாலில் அரைத்து வெண்ணெயிலாவது குமப்பி கொடுக்கவும். நீர்க் கட்டு விடும். உப்பு, புளி விடவும்.

சுரம் தலைவலிக்கு மருந்து :-

கலிக்கம், 1 நாபி, ரசம், கெந்தகம், லவங்கம், சாதிக்காய் இது வகைக்கு விராகனிடை. க, மிளகு விராகனிடை. எ இது ~~[illegible]~~ யெல்லாம் சுத்தி பண்ணி குப்பை மேனிச் சாற்றில் இரண்டு சாமம் அரைத்து குளிகை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு காடி பாலிலரைத்து கலிக்கமிடவும். கண் வீங்கினால் கத்தாழை சோற்றை கழுவி கட்டவும். நசியம்: எருக்கம் வேர் காடி வார்த்தரைத்து நெய்யில் கலந்து நசியமிட தலைவலி நிற்கும். இதுக்கு மாற்று குளிர்ந்த தண்ணீரில் கழுவ நிற்கும்.

சுரத்துக்கு அரையாப்புக்கு எண்ணை :-

வெள்ளை பாஷாணத்தை பாகல் சாற்றில் சுத்தி பண்ணி சாதிலிங்கம் சுத்தி பண்ணி சமானமாக கட்டி பாகல் சாற்றிலரைத்து சிறு பயறு பிரமாணம் குளிகை பண்ணி நவ சுரத்துக்கு இஞ்சி சாற்றில் கொடுக்கவும். ஒரு உருண்டை கொடுக்க சுரம் நிற்கும். பத்தியம் கடுசா யிருக்கவும்.

அரையாப்புக்கு எண்ணை :-

கொடிவேலி வேர் பட்டை ஒரு பிடி, பெரு மரத்து வேர்ப் பட்டை ஒரு பிடி, வேளை வேர் ஒரு பிடி, சிறுகீரை வேர் ஒரு பிடி, நேர்வாளம் பருப்பு பத்து ஈர வெங்காயம் பலம். உ இது யெல்லாம் கூட்டி நறுக்கி எண்ணை காய வைத்துக் கொதிக்கிற போது மருந்தைப் போட்டு பொங்காமல் சிவக்கக் காய்ச்சி இறக்கி அதில் பழவிடைரசம், மணத்தக்காளி சாற்றில் முறித்து எண்ணையில் கலந்து தட்டக் கினி எண்ணை அந்தி சந்தி கொள்ளவும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

நீர்க் கட்டுக்கு, மூலக் குத்து நோவுக்கு :-

மணலியை நறுக்கி படி நீர் விட்டு அரைப் படியாக காய்ச்சி வெங்காரம் விராகனிடை. க, எருமை சாணியில் சுத்தி பண்ணி பொரிச்சு கூட்டிக் கொடுக்க நிற்கும்.

ஓரிலை தாமரை வேரும் அரசம் பிசினும் அரைத்து பசும் பாலில் குடிக்க கல்லு நெரிச்சு விழும்.

நாயுருவி வேர், சொப்பு நெருஞ்சில் வேர் இது இரண்டும் தேன் விட்டரைத்து மூலை மேல் பூசவும் மூலைப் புண் ஆறிப் போகும்.

மறக்கால பட்டை அரைத்து சீலையில் தடவி புண்ணு மேல் பூசவும் ஆறிப் போகும்.

சன்னி கசாயம் :-

முன்னை வேர், காட்டு வாழை வேர், வில்வப் பத்திரி வேர், நெருஞ்சில் வேர், பாப்பார முள்ளி வேர், சித்தமல்லி வேர், பெரிய மல்லி வேர், சுக்கு இவை கசாயமிட்டு கொடுக்க சுரம் பதினெட்டும் தீரும்.

மூக்கில் வாயில் ரத்தம் கண்டால் :-

கத்தாழை சோற்று மட்ட சாம்பலும் பிசைந்து தலையின் மேல் அப்பி சித்தா மணக்கிலை போட்டுக் கட்டத் தீரும்.

தலை நோவுக்கு :- சீந்தி இலை, நீர் முள்ளி இலை சுக்கு இவை மூன்றும் கூட்டி நறுக்கி சாறு பிசைந்து நசியமிடவும் தலையில் கட்டவும். ~~[illegible]~~

பிள்ளை யுண்டாக அருக்கிரு சூரணம்:-

பூசத்து நாள் பூவரசு மேல் புல்லுருவியும் புங்கு மேல் புல்லுருவியும் பசுவின் பாலிலரைத்து விலக்கமான நாளில் மூன்று நாள் குடிக்க பிள்ளையுண்டாம்.

அமுக்கிரான் கிழங்கு உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி வெருகடி பிரமாணம் பசுவின் நெய்யில் கொள்ளவும் உடம்பு பருக்கும். நெய்யும் தேனும் கூட்டிக் கொள்ளவும்.

இருமலுக்கு எலி கடிக்கு:-

கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு மோடி இவை பொடி பண்ணி சீலையில் பரப்பி திரி சுத்தி விளக்கில் கொளுத்தி திரி புகை பிடிக்க இருமல் தீரும். விளக்கெண்ணை நாழி, சித்தா முட்டி வேர், பேரு முட்டி வேர், கண்டங் கத்திரி வேர் நா வளை வேர், சேப்பு நெருஞ்சி வேர், தூகரை வேர், சிவனார் வேம்பு, சங்கம் வேர், பூரசி மரத்து வேர், வேலிப் பருத்தி வேர், வெள்ளருகு முட்க் கொக்கான் அவிஞ்சில் குட்டிப் பிலா சிறு தேரை பொன்னாங்கண்ணி நிலாவாரை நீர் முள்ளி நொச்சில் கழுதாம்பு சங்கங் குப்பி கோரைக் கிழங்கு, கத்தாழை செருப்படை இந்த வகைக்கு பலம். சமனாக கொண்டு பேய்ப்புடல் பற்படாகம் கடுக்காய், கருஞ்சீரகம், செஞ்சந்தனம், திப்பிலி மூலம் அதிமதுரம், அரத்தை சாதிக்காய், சாபத்திரி தானிக்காய் லவங்கப் பட்டை கருஞ்சீரகம் கிராம்பு இந்த வகைக்கு விராகனிடை.௧ வசம்பு விராகனிடை. வெங்காயம் விராகனிடை.௩ சாதவளி பழம் விராகனிடை.௩, கண்டங் கத்திரி பழம் விராகனிடை.௩ முன்சே காட்டு வகை மருந்து வகைக்கு விராகனிடை.௨ எல்லாம் கூட்டி இடித்து பொடி பண்ணி எண்ணையில் போட்டு எட்டு நாள் சூரிய புடம் வைத்து எட்டு எடை எண்ணை கொடுக்கவும். இதுக்குப் போகும் வியாதி சுரம், சுவாச காசம் காமாலை கரப்பான் எலிகடி, இரைப்பு இதவெல்லாம் தீரும். இது கை கண்டது.

வெள்ளை ஒக்காளத்துக்கு மருந்து:-

ஏலரிசி, சீரகம், தாளிச பத்திரி, திப்பிலி, அதிமதுரம், வெங்காரம், தேத்தான் கொட்டை நெல்லுப் பொரி, மயிலிறகு கருக்கிட்டம், புகலை கருக்கு ஆமையோடு, கருக்கு கடை மருந்து எட்டு வகையும் பத்தில் வறுத்துப் பொடி பண்ணி முன் கருக்கு கூடக் கலந்து எலுமிச்சம் புளியில் மூன்று நாள் கொடுத்து வெள்ளை ஒக்காளம் நிற்கும். இது கை கண்டது.

* (முதல்   முடிய பக்க ஏடுகள் மரண கண்டி சாஸ்திரம். பிரதி செய்யாமல் விடப்பட்டன. *)

****

அரிய வெண்பா:-

1. அரியமாம் வாகடத்திருட் பொருளை ஆராய்ந்து
சரியதாய் செந்தமிழை செப்புகிறேன்
கூறுகிறே வுள்ள நிதானம் மத்திலஞ்சி மயிலைகனே வள்ளலே என் மீதில் வா.

2. கட்டனா வென்றவகின் சேத்துமத்தில் வந்ததொரு
பொட்டு கிருந்திகளும் பேய் விடுமே
பாவனையாய் வாகான பீனிசமும் மத்தும் சனி தீற
ஓத்திருணம் பன்னு மரத்தை.

3. அரத்தை சதகுப்பி சுக்கு ஆன நொச்சிலைச் சாத்தில்
உரைத்தழுக்காய் காச்சிய பின்னன்ன வருத்த மதன் தலை வலியம திரெத்தம் கண்டனே
பீனிசமும் குலை குலைந்து போகுமே என்று கூறு.

4. கூற மென்ற பட்டை கொன்னை சித்தாமுட்டி வேர்
விஷேசனமும் வேலிப் பருத்தியுடன்
கூறுகின்ற நன் மிளகும் கூட்டி நயமாக கசாயமிட்டு சன்னி யில்ல வாக சுரம்
செப்பு.

செப்பு மெறம் பேரிலந்தை சேரு மலை யருந்த வுப்புடனும் மேகாடியுடனரைத்த
மெய்ப்பாக மத்திட்டு தான் கலைத்த வந்தனரை பூசி விக்க சீத்த மெரிவாத மில்லை
தான்.

6. நாகனென்றும் வெள்ளுள்ளி தப்பாமலுப்பு மேந்தி
வேனென்றும் அக்கினியில் வேக வைத்து
மானென்றும் மிங்குவ்வுடனே யரைத்து யிருந்த
நிரை குடிக்கில் மங்கு சூலை வாய்வு மில்லை மான்.

7. மானே கேள் நீரடைக்கில் வழும் பசரியுடன் தானே நிலகத்திரி இலையும் பானையில் போட்டு கசாயமிட்டு வெங்காரமிட்டு நத்தில் கல்லடைப்பு தீருமெனக் கான்.

8. காணும் புளற நவமும் காயங் கழல் பருப்பும் பூபன் வசம்புடனே பொரந்த சுக்கும் வேணுமென பன்னீர் கசாயம் பருகி பருகிய பின் விள்ளின் லாகம் போம் விண்டு.

9. விட்டதொரு வேப்பிற்கும் மேவு கருவேப்பிற்கும் முட்டு சுக்கு கிரகமும் மோகமும் தட்டியிட்டு காய்ந்த கசாயம் கொள்ள காணு[illegible]ம் பாய்ந்த கிரனிகள் போம் பார்.

10. பூரிசைந்த நெல்லி முள்ளி பாரியதோர் கலிக் வேர் சீரிசைந்த சீரகமும் சேர்ந்த சுக்கும் வேரிசைந்த சித்தாமுட்டி நெல் பொரியும் சேர்ந்த கசாயம் கொள்ளில் பித்தம் விட்டோடு மெனப் பேசு.

11. பேசும் பிரண்டையுடன் பேரிசைந்த வேப்பிற்கும்
மூசும் பரிச்மும் வித்த மோதகமும்
வாசி பண்ணி கொள்ளிற் கசாயமதில் குன்மம்
விருசிருமா வின்ளிற் விழக் கேக்கு மிர மெய்.

12. மீந வெறும் கள்ளியுடன் வேற்தலிற் சுண்ணம்பு மெந்தி
போகமுடன் திற்புடமிட்டு பாதியுடன் வீக்கம் பிளவையுடன்
வீரிய தொறங்குமந்த பாருக்குள் பறந்தோடும் பண்வு.

13. பண்ணும் பருத்தி வேரை பாருள்ள நெற்பொரி யும் என்னுவ விக்கல் அசந்த போ போமே விரைந்து.

14. விரும்புகின்ற. சீரகமும் மேன்மையுடன் நெல்லி முள்ளி
பெர்ரும்பு சுக்கேலமுடன் பொடிசையாய்
நிறம்பிடவே சர்க்கரையும் தேறும் க்ளற் குத்தன்ன
சொக்கற் திடுவாலையே பித்தம் செப்பு.

15. செப்பு சிறு மன்னறம் சுத்தி பொடியுருவி சாம்பல் மிளகு பொடி
நற் சரியாய் தெம்பிடவே எட்டிலொன்றாய் கசாயமிட்டு இறக்கி கசாயம் கொள்ளில்
அஷ்ட குன்மமும் போகுமே அலைந்து.

16. அலைந்து குவலையோ காந்தம் பொடி செய்து தலையின மிளகு பொடி தற் சரியாய் மலையிற் பெருங்காயந்தான் கூட்டி பேருலகிலண்ட வாதம் வருங்காயம் போல் வீங்கினது வாடும்.

17. வாடுகின்ற விந்தவிக்கு பதலஊக சாந்தொடுந்
தேடுகின்ற காயமதிற் சேற்பதி டுகின்ற செம்பு ரசம், சாத்தில் செல்த்தும்
செலுத்திய பின் வெம்பு மெரி குன்மம் வெரிந்து.

18. வௌந்தமிளகரைத்து வெந்நீருடன் கலந்து பொருத்தப் புளியிலணங்கை பொந்துகின்ற சூலை தடற்சிருமி சிதஞ்சி த்றனமும் பலி குடி போகுமே பேரு.

19. பெரும் பேய் சுரை இலையும் பேரீச்சம் கூட்டி மிருகின்ற பிட்டாக்கினத்தை வாங்கியே கூறு நீ கேள் திப்பிலியும் வெங்காரம் சூரணமும் நேரமிட உப்புடனே காயமெல்லாம் ஓடும்.

20. பார்ரோ நீர் பிணிகள் பேயன் பழத்துடனே சேரிரே சர்க்கரையும் சீரகமும்
சாரிரே வுண்டாக்கால் போகாதோற் உள் காச்சல் பிரமியங்கள் கண்டாக்கால்
பித்தம் போம் காண்.

21. காவி. ஆடாதோடை கண்டங்கா வித்துளசி பேனி பிட்டுக்கினத் தேனிற் பிசைந்து மேல்
கொள்ள கக்குக கெண விரும்பும் காசமீளை யிரும்பல் போக்கு போக்கென வெறடும்
போக.

22. பொதிருடா தோடை இலை பொர்ந்த பொரு முந்திரிகை சோதியினிற் குடி நற
செய்திடி நிறமாத்திரியாயி அக்காறம் கூட்டி அருத்திரருத்திய பின் வுக்கார்தக்காது
பித்தம் ஒடும் உருகின்ற தாளிசையும் பத்திரியும் ஜொளமொடு தெருகின்ற நாகப்பு
திப்பலியும் மாருகின்ற சுகை நீரெலமுடன் கூட்டும் லவங்கமுடன் பாகமாய் குரணத்தே பண்.

23. பண்ணி பின் சர்க்கரையும் பாதகம் பெதக்கம் கூட்டி என்னை இரு கழஞ்சி தேன் விட்டு
நணைநண வெளுவிலிடக் காங்கள நன்னு விருேசிகமும் பூவி நிடம் விட்டோடிப் போம்.

24. போமே கடுகு நெல்லி பொதிரிய தான்றி சிங்கி எமாஞ்சி கோஷ்டம் ஏலமுடன்
பூமேவும் திருகடுகு இந்துப்பு தேக்குடனே கண்டங் காலி அரிய வடித்து வடி செய்.

25. தானே கடப்பம் விதை தப்பாமலே கழஞ்சு மானே வெண்ணீர் தனிலே வாங்கிறல்
ஞனே சொல் எழு நாயரும் கிறந்தி யீளை எலி கடியும் விருமே என்றுரு மித்தை
வேண்டு.

26. வேண்டும் வேலிப் பருத்தி சாரும் விள்ங்குமங்கு நின்று சென்ற ஆமணக்கின் என்னையுடன்
பாண்டமதில் யிட்டு வடித்துன்ன யீளை சுவாசமுடன் திறண்ட பொடி தேனில் அருந்திட்டவே
குஷ்ட்ட திளம் செய்யும் சுவாச கூய காசம் கெட்டனவே போகுமெனக் கேள்.

27. கோரங் கையாந்த கரை சாருழக்கு கடுக்காய் ஆமிந்த நல்லெண்ணையில் வடித்து ஞுன்ன
தின்னிற் பலருநும் சேத்தமத்தால் வந்த பிணி சொன்னேன் போந்தேன் மொழியே தாது.

28. நாகவளையின் பழஞ்சாற் சுத்த நெய் பால் தாமதில் திரிகடுகு சீரகமு மாதே
கேள் காரேழ் நாள் கொள்ள காச சுவாச மீளை பாறெனவே பேசவிடும் பார்.

29. பந்தியாய் நார்த்தன் பழம் சாற் திரிபலையும் தேருந்திரு கடுகு தேக்குடனே கூறக்
கேள் தேத்தான் பழஞ்சாறு தேனை மிதிற் கூட்டி யுன் மாத்தரிய காச சுவாசமாரும்.

30. மாயம் தொடைச் சாரும் வந்தாவின் நெய் பாலும் தேரு மிரு திப்பிலியும் சேர்த்து
நீ கூறுகின்ற கொடிவேலி தேறட்னே கூட்டி யவக்ஷாரம் அடவாக நீ வேகவை.

31. வேக வைத்த நெய் கொள்ளில் மேவும் சுவாச காசம் பாக பயிரெத்த பித்தம்
பூார் பாியந் தேகத்தில் வந்தொரு மேகம் மத்து மிரு சுரமும் விந்தை என்னி விட்
டோடிப் போமே.

32. பொருந்துள்ள நீரில் பொரு முதியாள் கூந்தல் அரிந்தே ~~அரிந்தே~~ அகன் வேரரைத்து
மருந்துன்ன மாரும் சுர மெய் குளிருமானே மொழி மடவீர் தீரும் சுரமே போமே
திசை கெட்டே.

33. கட்டை வெள்ளி கக்கினன் வேரு கழற் மிளகும் கூட்டி இள வெந்நீரில் கொண்டு விடில்
நாட்டை விட்டுப் போமே அசீரணமும் போக முதிர்ந்ததில் நாமே யுரைத்த
மிக நன்று.

34. சமித் தயிரும் பகளை தப்பாமல் காய்ச்சி அமுக்கி அவன் குழியில் வைக்க அமர்க்
களமாய் சாரும் விசுனி தாரும் தண்ணீர் தாகம் தீருமே கின்ன மிக செப்பு.

35. எல்லாம் கிறத்தி எழும்பி வரும் வாத பித்தம் சொல்லாக சேத்துமத்தில் தோன்றி
எழுப வில்லாரும் நீள் புருவம் தானே நிறந்த கருப்பானம் மெல் புவியோர்க்குள்ளோர்க்
கியம்பு.

36. எயம்புந் திமிற் வீக்கம் எங்கு மகிஷ்ட்டி கயம்பு கணுக்கள் கடுப்பம் பயம் பெறவே
வீந்த மரை கீறத்தில் வாத கரப்பான் வீக்கம் செந்தமரை முகத்தா செப்பு.

37. வாரு கொண்ட வேலி வனக்குருஞ்சாறி வெள்ளறுகு கூழம் கரி வேம்பு குடச பாலை

சீருஞ் சிவனார் பெரு மருந்தும் செங்கத்தாரி மிளகும் இவை கொள் கரப்பானெனுமென்.

38. எங்கும் கருநொச்சில் எத்த மிஞ்சில் சாருக்கி யாக்கும் கறந்தை சின்னியா மணக்கும் பாதமற வடியிற வசம்புள்ளி வாளம் ரேகனி இரண்டும் அடியிற் பசிற் கரப்பான் குத்தம்.

39. கின்றுற் சிறு குறட்டை தேங்காய்ப் பால் சங்குள்ளி தன்னந் தனிந்தினி யெசமற உமக்க மன்ற கேள் ஆமணக்கு நெய் கடுகுரேகனியிற் காச்சியுள்ள சாமந்தவிற்கு மதை சாய்க்கும்.

<u>உள் காச்சலுக்கு:-</u>

பொன்னாங்கன்னி, முசுமுசுக்கை புதிய காளி பழம் பாச்சி நன்னிய புலா இலை சாறும் நறுக்கி தேவி சித்தாமுட்டி முன்னை நாமை முளைச்சாரம் முந்த பாவம் மிளகு நீரு மன்னுங் கொடி அதிமதுரம் வகையுடன் நெல்லி சீரகம் கூட்டே.

கொத்தமல்லி நாக்ப்பூ கொடிய வெக சீனி சர்க்கரையும் அமுது மஞ்சள் செண்பக புவுக்க சூரணந்தான் செய்தால் உள் காச்சல் மிகவே யோடிடுமே.

<u>வயிறு கடுப்புக்கு:-</u>

இடுப்பு கடுத்து வயறு ஊத்த இருக்கும். சீதம் மந்தித்தால் முருக்கும் துயரம் மகிழுகமாய் முன்னே மேகம் கழிக்கடங்கும். முடுந் தொரன்ஞ் துளை தொடார் மறவே மெலிந்து உலர்ந்து வரும். தொருக்கும் வயத்தில் கடுப்பு, தொப்புள் சொன்றற் செய்யும் துயர் கண்டே.

<u>இதக்கு மருந்து:-</u>

நெய் தேனில் யிசையும் கிறக்கி மலை தாங்கி பகரும் வேப்புலா முத்தம் வசம்புங் காடு முனிந்த ~~[illegible]~~ சுக்கொடாரி விடையம் முனிந்த சீரகம் முதகமுமாய் தனித்த கைப்புகும் முந்திரிகை தானே கழஞ்சு கொண்டு நெய்யில் வழிந்த வேகவத்தருக்கும் மானே வயத்துக் கடுப்பருமே.

<u>பித்த வாய்வுக்கு:-</u>

சீக்கு நெருடன் மிளகு திப்பிலி ஐய்ய தாளிச பத்திரி மிக்க முந்திரிகை
மிக்க முந்திரிகை கூகை நீருடன் விளங்கு சீரகம் எலமும்
வொக்கவே சரி சர்க்கரையுடன் உண்ட போது கொள் வியர்திலை
பக்க வாய்வுகள் சத்தி மன்மமும் பித்த வாய்வும் விட்டோடுமே.

<u>ரத்த பிரமியத்துக்கு மாந்தத்துக்கு மருந்து:-</u>

அத்தி இவ்வரை நருக்கி பசும் பாலில் பிசைந்து வடி கட்டிக் கொண்டு அதில் சர்க்கரை கலந்து எருக்கம் வேர் கொண்டு வந்து பஞ்சு போல் நறுக்கி பாலில் பிசைந்து மூன்று வேளை கொடுக்க ரத்த பிரமியம் போம்.

<u>மாந்தத்துக்கு:-</u>

ஒருதலை உள்ளிப் பூண்டு பாதி மோடி வசம்பு தேற பாதி மிளகு. யரு, நீர் விளங்கொமந்த வேலிப் பருத்தி இலை வேர், சாறவேளை வேர், குப்பமேனி இலை வேர், நாய் வேளை இலை வேர் இவை வெல்லாம் சமமாக கூட்டி பசுவின் நெய் விட்டு பதத்தில் விட்டு வடித்து தாய் முலைக் காம்பிலும் பிள்ளை நாவிலும் தடவி முலைகொடுக்க மாந்தம் தீரும்.

<u>நரம்பு, சிலந்தி பல் நோவுக்கு கெந்தகம் தயிலம்:-</u>

ரசம் விராகன். க, கொண்டு வந்த பொருதலை சாத்தில் அரித்து வெத்திலை யில் தடவி புண்ணின் மேல் வைத்து கட்டி நாலா நாள் அவிழ்த்துப் போடவும். புழு விழுந்து போகும்.

<u>பல் நோவுக்கு கெந்தக தயிலம்:-</u> கரு ஊமத்தின் வேரும், கெந்தகமும் இவை இரண்டும்

சரி சமானமாக சேர்த்து அரைத்து குழப்பி மெல்லிய சீலையில் தடவி திரி போலே திரித்து விளக்கில் கொளுத்தி ஒரு சட்டியில் பிடிக்க தயிலம் விழும். அந்த தயிலத்தை பல் நோவுக்கு வெத்திலையில் தடவி பல்லு நோவு தீரும்.

அண்ட வாதம் விரை வாதம்:-

கரிய போளம் இந்துப்பு நவாசாரம் கடல் நுரை கோஷ்டம் எலுமிச்சம் பழம் சாத்தில் கொறக்க வைத்து பசவும் வாதம் தீரும்.

கலைகொம்பு பற்பம், பவள பற்பம், சங்கு பற்பம், மிருதார் சிங்கி பற்பம்:-

கலைக் கொம்பு கொண்டு வந்து கத்தரிச்சு அதை எடுத்துக் கொண்டு உருந்து நால்படி எருமைத் தயிரிலரைத்து அதில் அந்த கொம்பைப் போட்டு பிசறி ஊற வைத்து மறு நாளெடுத்து ஒரு ஓட்டில் வைத்து புடம் போட்டு எடுத்து மறுநாள் வெள்ளாட்டு பாலில் அரைத்து பில்லை தட்டி உலர வைத்து புடம் போட்டு எடுக்க பற்பமாகும். அதை வைத்துக் கொண்டு அதின் பிறகு பவழத்தை எருக்கம் பாலில் ஒரு நாள் ஊற வைத்து ம நாள் கழுவி எலுமிச்சம் புளியில் ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் கழுவிப் போட்டு பாப்பாற முள்ளி கொண்டு வந்து இடித்து அதில் பவழத்தை புடம் போட்டு எடுத்து வைத்து கொள்ளவும். சங்கு கொண்டு வந்து லவணம் அரைத்து பூசி வெய்யிலில் ஒரு நாள் வைத்து மறுநாள் புடம் போட்டு எடுக்க பற்பமாம்.

மிருதார் சிங்கி கொண்டு வந்து கட்டியாய் லவணமரைத்து மேலே தடவி வெய்யிலிலே உலர வைத்து மறுநாள் புடம் போட்டு எடுக்க பற்பமாம். இந்த பற்பம் நாலும் கூட்டி ஏகமாய்க் கலந்து வைத்துக் கொண்டு தேனில் கொள்ளவும்.

சீதக சூரணம்:- வாய்வு பித்தம் சகலத்துக்கு மாகும். மேகத்துக்கு மாத்திரம் கொடுக்க லாகாது. இது தப்பில்லை என்று அறியவும். வாய்வு வடை சாறுவன் பிணிகள் சேராது. காயம் நெகிழாது. கண் குளிரும். ஓயாமல் காறளக மயிலேகண் கண்ட திப் பொழுதே சீரகத்தை விந்து மிக வுண்டாகும். சடக்கெனவே மூப்புமாம் தள்ளி விடும். கடுக்காய்க்கு வாத பித்தம் மையருக்கும் வன்னி எழு வாலிபமாம். சாதி சிறு காலையிலே தான் சுக்கு சூரணம்.

not required

சுக்கு சூரணம்:-

சுக்குக்கு ஏது மிரும், சொல்லரிய தீபனமாம். மிக்க சுவாசம் போம். மெல்லிய லாய் தக்க தொரு மூக்கு நீர் பாய்ச்சல் போய் மூல ரோகத்திரெடு காக்கியதோர் நீர்கள் போகுந்தான்.

இஞ்சி சூரணம்:-

இஞ்சிக்கு வாதம் போம். இருமல் இவை சேராது. வஞ்சிக்கு செபந்தனி மாத்தி விக்கும். அஞ்சிக்கும் சூலையுடன் ஆரோசிகம் தொக்கார்து சொல்லுங் காால் வேலனை கண்ணாய் விளம்பு.

நீரழிவுக்கு:-

ஆவாரந்து துளிற், கல்மஞ்சம், கொன்னை வேர் நிவேரைந்து குடிப்புளி மோருடன் புளிரைந்து புனல் காவேரி போலவே தான் விரைந்து வரும் தவர்க்குமே. புளியின் பழந்தோல் ஆவாரை பூவரசன் தோல், நெல்லி முள்ளி அழிய குன்டை கான் சாத்தில் அரைத்து மிகவே பருகுவீரேல் கிளி போன்ற மொழி மடவாய் கிளர்ந்த பெரு நீரடைப்பு கதும் ஒளியே கண்ட யிருள் போலே யொளித்தே யோடி போய் விடுமே. ~~மிண்டிய மெள்ள~~

மிண்டிய ~~[illegible]~~ மெள்ள கொடு சங்க ஏா அவளை சொண்டியும் நிலமுள்ளி துவள அண்டி நீருவுண்ட பின்னொரு திறம் யிரும்பலங் கொருள்வீருய் தென்றமு மிருப்பன திறக்கமாய் காணுமே.

கிடைத்தலை யளவிலே கிள கிள நிலவே யிருடி யென யிரும்பலானதும் வெடிய தன்னளவிலே மிளகுடனுடன் பொருதலை கழஞ்சு கொள் புருஷ ருவிரே.

சுக்கு திப்பிலி தூய்ய கருங் கொள்ளு ஒக்க கொண்டொரு குளிகை முழுங்கிடில்
குக்குக்கெனக் கொல்லென்றிரும்பியே கொக்குப்போல் வருவாற் றுயல் பேர்லொக்குமே.

நான்டுலை சுக்குடன் சங்கு ஈரவளை கண்டிய கடுகுடன் கலந்து வெந்த நீர்
உண்ட பின்னை திறம் யிரும்பல் கொண்டிடில் தெண்டனமும் பட்டு நான் திறுமல்லவே.

யீண்டு கருகொடு வேலை பொடியுடன் கொண்டு திறட்டி யிறட்டி குளத்துட
கண்டறும் உண்ட ஜூசி காந்தமதும் யொயாப் பொன்று வாரையுடன் உண்டை காயாவு
உகந்த அரக்கு
தான முழம் வண்டார் குழலாள் செய்த தொரு மருந்து பறந்து ஓடிடுமே.

குலம்பழ வறளைக்கு :-

குலவகத்தில் நோவும் நெஞ்சுயிலே நோகும் யிரும்பல் காணும். சளி வாளை நாற் போலே வரும். வாய் நாறும்.

இதுக்கு மருந்து :-

அப்புக் கோவை ஆகா கெருடன் கிழங்கு படுபாகல் கிழங்கு, புளியறளை கிழங்கு, நிலப்பூளைக் கிழங்கு சென பெறண்டை கிழங்கு, காட்டு வாழைப் பட்டை வெள்ளை சிங்கை பட்டை பொருசுப் பட்டை அத்திப் பட்டை திப்பிலி மூலம் கருஞ்சீரகம், வாய் விளங்கம், சுக்கு, மிளகு, உள்ளி, வசம்பு, ஈர வெங்காயம், கடுக்காய் இது வகை ஒன்றுக்கு விராகனிடை. கூட்டி அரைப்படி விளக்கெண்ணெயிலாக்கி கொடுக்கவும். பழவறளை தீரும். பத்தியம் கடிது.

சீரகம் பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, மோடி பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சடாமாங்கிஷம் பலம்.க, தம்பருஷ்டகம் பலம்.க, மிளகு பலம்.க, லவங்கம் பலம்.க, அக்கலா காரம் பலம். அதிமதுரம் பலம். கடுகுரோகணி பலம் குருசாணி ஓமம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, இது வெல்லாம் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு பிறகு வெங்காய ரசம் ஒரு மானம் தும்மட்டிக்காய் ரசம் ஒரு மானம் விளக்கெண்ணெ ஒன்னே கால் மானம் இது மூன்றும் கலந்து மெழுகு பதத்தில் இந்த காரம் போட்டு பதத்திலிறக்கிக் கொள்ளவும். பத்தியம் கெடுசு.

ரத்த பழவறளைக்கு :-

இருமல் காணும். ரத்தம் சளியில் விழும். வாய் நாறும். அறட்டல் காணும். பக்க மெல்லாம் நோகும்.

இதுக்கு மருந்து :-

வெள்ளை கர்க்கிது வேர் படுபாகல் கிழங்கு மிளகரளைப் பட்டை, பேய் சிங்கை பட்டை, பெரிய கொள்ள பட்டை, நாரிஞ்ச பட்டை, நிய நெல்லிப் பட்டை அருவா பிடி கிழங்கு, சித்து வரைக் கிழங்கு, முசுமுசுக்கை வேற்காட்டு நாறத்தும் பட்டை காட்டு எலுமிச்சம் பட்டையும் பழமும் சித்தா முட்டி வேர் பேரு முட்டி வேர் சாறளை வேர், குப்ப மேனி வேர் மண்தக்காளி வேர் இது வகைக்கு பலம்.க, தம்பராஷ்டகம் திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், நல்ல மஞ்சள், கடுகுரோகணி, கொத்தமல்லி, வாய்விளங்கம், கருஞ்சீரகம், வெங்காயம் ~~[illegible]~~ இது வகைக்கு பலம்.க, சிந்தாமணிக்கெண்ணெ ஒரு படி இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி எண்ணெ காய வைத்து வெங்காய முளை வாங்கிப் போட்டு பிறகு வெட்டு வகை போட்டு பதம் பார்த்து இறக்கி கடை சரக்கு பொடி போட்டு கம்பு முடாவில் எட்டு நாள் வைத்து எடுத்து சாப்பிடவும். பத்தியம் கடுமையாயிருக்கவும். கம்பு கஞ்சி காய்ச்சி குடிக்கவும்.

மேக பழவறளைக்கு :- உப்புச மெடுக்கும். இருமல் காணும். காச்சல் காணும். கண்ணீர் தாக மெடுக்கும். பாயில் கிடை கொடாது. நித்திரை வராது. மனிதற் மேல் சாறளை யிருக்கு.

இதுக்கு மருந்து :-

தீய நெல்லி பட்டை, பேய் சிங்கை பட்டை, நல்ல சிங்கை பட்டை, கிராக்காய் பட்டை, துறந்த பட்டை, பொரி பட்டை, தொட்டி முள்ளு பட்டை, மாகறளை பட்டை, மத்தி மறத்து பட்டை செம்பிரண்டை கிழங்கு, படுவா கிழங்கு இது வகைக்கு பலம்.க, ஓமம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் இது கூட்டி பொய் வறலாக வருத்து சூரணம் பண்ணி சாப்பிட மேகம் பழவறளை தீரும். பத்தியம் கடிது. இதுக்கு மிஞ்சுறல் நெக்கினி தழையும் பட்டையும் கசாயமிட்டு தயிலம் போலே காய்ச்சி இறுத்துக் கொண்டு முன் சூரணம் கூட போட்டு கொடுக்கவும். அதின் பிறகு திப்பிலி, மிளகு, மோடி உள்ளி லவங்கம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, தாளிச பத்திரி, தம்பருஷ்டகம் இது வெல்லாம் பொடி செய்து வெருகடி பிரமாணம் வென்னீரில் கொடுக்கவும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

மருந்தீட்டுக்கு :- not required

கண்டங்கத்திரி பட்டையுடன், பெருங்காரைப் பட்டையுடன் உருண்டை திரட்டி உருட்டி முழுங்கிட கொண்ட இருமலும் குடி விட்டு போகுமே.

குன்மத்துக்கு :-

அய்யாரு குல்மத்து கறப்பநேவாயிருக்கும். மெய்யாக சோறுன்ன வேண்டாது. பொய்யாது. மேல் வயறு தான் பிறம்பும். மிக்க ஏப்பமுண்டாம். செலவல்லனைய கன்மடவாய் செப்பு. குன்மங் காணும் அரியக் கூழ் உப்பி இல்லாமல் காய்ச்சி வார்க்கவும் மெழுகு பழவறளை தீரும்.

திப்பிலி பலம்.க, வெங்காரம் விராகனிடை.க, மோடி பலம்.வ, சுக்கு பலம் 1/2 தம்பருஷ்டகம் பலம் 1/2 பவுவடிசிகை சுங்கு சக்கை பாப்பாற முள்ளி வேர்பட்டை நாவலை வேர்பட்டை முன்று சுண்டை வேற் பட்டை இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி தேன் ஒரு சேர் காய வைத்து இது வெல்லாம் போட்டு லேகியம் போலே பண்ணி கச்சக் காய் பிரமாணம் சாப்பிடவும். உப்பு, புளி நீக்க விடவும்.

சித்த பழவறளை :-

காச்சல் வரும். இருமல் காணும். வாய் நாறும். பக்க மெடுக்கும். களி மஞ்சள் வர்ணமாறுற் போலே வரும்.

இதுக்கு மருந்து :-

மோடி, சாதிக்காய், சாதிலிங்கம், லவங்கம், பெருங்காயம், ஏலம், தம்பருஷ்டகம், கஸ்தூரி மஞ்சள், ஓமம் கண்டு பறங்கி, வசம்பு மஞ்சள் பறங்கிப் பட்டை மிளகு இது கூட்டி பொய் வறலாக வருத்துக் கொண்டு இத்தடனே நெக்கினி தழையும் பட்டையும் கொண்டு வந்து பொய் வறலாக வருத்து கசாயம் வைத்து கொடுக்கவும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

இதுக்கு சூரணம் முன் சொன்ன வகை பதினும் பெண்ணு சட்டவை சுங்க சக்கை பவுவடி சிங்கை தீய நெல்லிப் பட்டை பாடுவா கிழங்கு திப்பிலி, சீரகம், கடுக்காய், தானிக்காய், வசம்பு இது வெல்லாம் சூரணம் பண்ணி செம்பிரண்டை ரசம் ஊதி வாங்கி அந்த சூரணத்தில் கலந்து எலி காரம் பொ சுத்தி பண்ணி பொரித்து சூரணத்தில் கலந்து தேனிலே யாவது செம்பிறண்டை சாத்திலாவது கொடுக்கவும். பத்தியம் கடிது. நெல்லுக் கஞ்சி குடிக்கவும்.

செவிட்டு பழ வறளைக்கு :-

புளியறளை அப்புக் கோவைக் கிழங்கு அமுக்குறுங் கிழங்கு சித்தவரைக் கிழங்கு சிறு தமட்டி வேர், சிறு கிளா வேர், படுபாகல் கிழங்கு, நிலக்கடம்பல் வேர், நிலப் பனைக் கிழங்கு, வெள்ளை சாட்டறளை வேர், வெள்ளைக் காக்கிறன் வேர், விழுதி வேர் பவுவடிசிக்கை பலுக் காசி கிழங்கு காட்டு மஞ்சள், வேப்பம் பட்டை, சுண்டை பட்டை குறப் பட்டை, நரிஞ்ச பட்டை, புடங்கு நாரிப் பட்டை காட்டு நாரத்தம் பட்டை,

விசரி வேர் மெருகு சிங்கை, சுங்க சக்கை, தீய நெல்லிப் பட்டை மிளகரணை பட்டை
பனை வேர், செம்முள்ளி வேர், கண்டங் கத்திரி வேர், கற்ப்பாலை வேர், வட்ட
திருப்பி வேர், ஊசி கக்கரை வேர் ஊசி தொட்டலாய் வேர், மிளாவரை, கடம்பம்வேர்,
பொரிசு பட்டை இது வெல்லாம் கூட்டி கத்திரிச்சு ஒரு முடாவில் போட்டு இரண்டு வள்ளம்
தண்ணீர் விட்டு படியாக காய்ச்சி கடை செலவு கும்பருக்ஷ்டகம், திப்பிலி மூலம், அக்கல்
காரம், கோஷ்டம், சாதிக்காய், சாபத்திரி, லவங்கம், ஏலம், சுக்கு, சீரகம்,
கருஞ்சீரகம், கடுகுரோகணி, கெண்டு பறங்கி, வாய் விளங்கம், மிளகு உள்ளி கஸ்தூரி
மஞ்சள் நாகேசுரம், மத்திஉக்டி மயூட்டி மொக்கு குரசாணி ஓமம், கசகசாபொஸ்தரம்
லவங்கப் பத்திரி, தக்கோலம், வெப்பாலரிசி, வெங்காரம் இது வெல்லாம் இடித்து
சூரணம் பண்ணி வருத்த முந்தெண்ணை படி.உ, இதில் முன் வேர் தயிலமும் கூட்டி அடுப்பில்
வைத்துக் கொதி வந்த பிறகு சூரணம் போட்டு பதத்திலிறக்கி உள்ளுக்கு கொள்ளவும்.
பத்தியம் கடுசாயிருக்கவும். செவிட்டுப் பழவனை தீரும்.

<u>வெள்ளைக்கு மருந்து</u> :-

மிளகரணை பட்டை, எலுமிச்சம் காய் மாதிரி அரைத்து மூன்று வேளை சாப்பிடவும்.

<u>இதுவும் வெள்ளைக்கு</u> :-

வெள்ளை குங்கிலியம் பலம்.க இதை பொடி பண்ணி நல்லெண்ணை விட்டுக் குழப்பி தண்ணீரில் போட்டு பிசைந்து எடுத்து வெள்ளைக்கு சுண்டைக்காய் பிரமாணம் இரண்டு வேளை ஐந்து நாள் சாப்பிடவும். இதுவும் கத்தாழை மடல் கொண்டு வந்து சாணியில் தரிச்சு நடுவே யிருக்கிற சோத்தை வாங்கி போட்டு அது பிடிக்கிற மட்டும் பச்சை பயற் போட்டு தும்பியில் அழைத்து வெந்த பிறகு எடுத்து அரைத்து எலுமிச்சங்காய் மாதிரி அரைத்து குளிகை சாப்பிடவும். இதுக்கு புளி மாத்திரம் விடவும்.

<u>மருந்தீட்டுக்கு</u> :-

எலுமிச்சம் பழத்தை நாலு கீத்தா கிழித்து வேலிப் பருத்திப் பாலூட்டி அதின் மேல் எருக்கம் பாலூட்டி அதின் மேல் சுண்ணாம்பு தடவி சுண்ணாம்பு குடுவையில் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து எட்டு நாள் புதைத்து மருந்திட்டு உண்டான பேருக்கு காலமே வயறு ரொம்ப மோரும் சோறும் சாப்பிட்டு அதின் மேல் ஒரு கீத்தை தின்னவும். வயறு பேதியாகும். இந்தப்படி நாலு நாள் கொள்ளவும்.

<u>வலம் சலம் கட்டினால் பேதி மாத்திரை</u> :-

தண்ணீர் முட்டான் கிழங்கு தவச்சு பசுவின் மோரில் பிசைந்து வடி கட்டி அரைப்பலம் கொடுக்கவும். வலம் சலம் விடும். சிந்தி இலை இருபது இதில் உப்பு போட்டு கசக்கி தூட்டிடை மாதிரி சாறு கொடுக்க வலமிறங்கும்.

கடுக்காய்தய மேல் தோல் சாள் பண்ணி நேர்வாளம் சுத்தி பண்ணின பருப்பு இது இரண்டும் கூட்டி எலுமிச்சம் புளியிலரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி வெந்நீரில் கொடுக்க பேதியாம். பேதி மிகுதியானால் மோர் கூட்டவும்.

<u>மூகர் பேதி காமாலைக்கு</u> :-

எலுமிச்சம் பழம் நாலாக விகுந்து அதில் ஆடு பருப்பு நேர்வாளம் வைத்து மத்த நாள் முகர்ந்தால் பேதியாம். எத்தினி தரம் முகர்ந்தாலும் பேதியாகும்.

தும்பைச் செடி காப்புக் கட்டி செவ்வாய்க் கிழமைக்கு பொழுது இறங்கிற போது தும்பை இலையை பறித்து வந்து உள்ளி வசம்பு கூட முலைப்பால் விட்டு நசுக்கி உள்ளங் கையில் பிசைந்து மூன்று நாள் சாப்பிடவும். மூக்கில் பிழியவும். இந்தப்படி நாலு நாள் கொள்ளவும். காமாலை தீரும். பத்தியம் கடுசாயிருக்கவும்..

<u>பயித்திய பித்தத்துக்கு</u> :-

எருமைக் கிடா காதில் குரும்பி எடுத்து எலுமிச்சங்காய் பிரமாணம் நல்

not useful

வெண்ணெ, வேப்பெண்ணெ இது இரண்டும் கூட்டி அதில் குரும்பியைக் கரைத்து ஊற்றி, வசம்பு கூட்டிக் காய்ச்சி வடித்து உள்ளுக்கு காசிடை கொடுக்க மேலுக்கு பூசவும். பித்தம் தெளியும். இதுவும் பத்து மாதம் காடியும் எலுமிச்சம் பிளியும் கூட்டி சர்க்கரை போட்டு உள்ளுக்கு கொடுக்கவும். மேலுக்கு சந்தனம் அரைத்து ஒரு வெள்ளம் தண்ணீரில் கலந்து இருபது நாள் உள்ளுக்கு கொடுக்க மேலுக்கும் பசவும். எந்த பித்தமும் தெளிந்து போகும்.

<u>மேகம் (உக) க்கு எண்ணை</u>:-

பழைய கம்பு குத்தி ஒரு நாள் பிளிக்க விட்டு மறுநாள் கழாக்கி அந்த மைப் பெரிய சட்டியில் ஊத்தி அதில் தண்ணீர் நிறைய வார்த்து எட்டு நாள் புளிக்க விட்டு அந்த தண்ணீரில் முத்துக் கொட்டை வேண்டுமென்றது வேகப் போட்டு மூன்று-நாள் உலர்த்தி இடித்து இளநீர் இருபது காய் தண்ணியும் புளிச்ச தண்ணீரும் ஏகமாய்க் கலந்து உலை வைத்து அதில் எண்ணை யாக்கவும். இல்லாவிட்டால் முத்து வறுத்து இடித்து இளநீரும் புளிச்ச தண்ணீரும் கூட்டி ஆக்கிற விபரம் எப்படி என்றால் கொதிக்கிற முத்திலே முடக் கொத்தான் கறசிலாங் கன்னி பொடுதலை அத்து பசறை குப்பை மேனி செருப்படை வள்ளி இது வகைக்கு ரசம் சேர்.க, பசும்பால் சேர்.உ இது வெல்லாம் கொதிக்கிற முத்திலே வார்த்து மடபடி வெள்ளைப் பண்டு பலம்.உ, வெங்காயம் பலம்.உ இதை நறுக்கி கொதிக்கிற முத்திலே போட்டு பிறகு வாய் விளங்கம் ஓமம் சீரகம், கருஞ்சீரகம் கடுகுரோகணி கடுக்காய், சுக்கு, மிளகு திப்பிலி மஞ்சள், கொத்தமல்லி, வெட்டி வேர், வெள்ளை நா பம் இது வகைக்கு பலம்.க இது வெல்லாம் இடித்து தெள்ளி கொதிக்கிற முத்தில் போட்டு தளாவி இறக்கிக் கொண்டு அந்த எண்ணையில் போடுகிற மருந்து லவங்கம் விராகனிடை.க சாதிக்காய் விராகனிடை.ங, ஏலம் விராகனிடை. கோரோசனம் பணவிடை.உவ, குங்குமப்பூ பணவிடை.க, கஸ்தூரி பணவிடை. இது பொடி செய்து இந்த எண்ணையில் சுடச் சுட போட்டு கலந்து ஒரு மண்டலம் தானிய புடத்தில் வைத்து எடுத்து முன்னே பேதிக்கு கொடுக்கிற பானை எப்படி என்றால் முக்குறட்டை வேர் ஒரு மானம். கடுக்காய்.யஉ இந்துப்பு விராகனிடை.க, பொடி பண்ணி வெட்டை பாக்கு.யஉ, இது மூன்றும் நறுக்கி படி தண்ணீர் விட்டு கால்படியாக காய்ச்சி காலமே இறக்கி இந்துப்பு பொடி போட்டு கொடுக்கவும். பேதியாம். அதின் பிற்பாடு எண்ணை ஏழு நாள் சாப்பிடவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. இதுக்கு போகும் வியாதி மேகம்.உக, வாய்வு.அய, பித்தம்.நஉ பிறமியம் இது வெல்லாம் தீரும்.

<u>சயிதப் பிற மாத்திரை அறியவும்</u>:-

ரசம், நாபி, கெந்தகம், விஷ பத்தி, கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி வாய் விளங்கம், மஞ்சள், வேப்பிலைகோரைக் கிழங்கு, சித்திரை மூலம் இது வகைக்கு விராகனிடை.க, ரசம், நாபி, கெந்தகம் இது மூன்றும் சுத்தி பண்ணி இது வெல்லாம் கூட்டி வெள்ளாட்டு பாலில் ஐந்து நாள் அரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு சுரத்துக்கு இஞ்சி சாத்தில் கொடுக்கவும்.

சன்னிக்கு:- சுக்கு மிளகு, திப்பிலி இது கசாயமிடவும். இல்லாவிட்டால் முருங்கைப் பட்டை மேல் தோல் சுருக்கன் வேர் மேல் தோல் கசாயமிட்டு கொடுக்கவும்.

<u>பாலந்த சன்னிக்கு</u>:-

ஆவாரை அரைச்சு கசாயத்தில் கொடுக்கவும். கண்ணேவுக்கு தெரியாத பேருக்கு கரிசிலான் கன்னி சாத்திலரைத்து விடவும். தேள் கடித்தால் எருக்கம் பாலி அரைத்து விடவும். இல்லாவிட்டால் நரை மூத்திரத்திலாவாது எலுமிச்சன் சாத்திலாவது கொடுக்கவும்.

கண்ட மாலைக்கு: தண்ணீரில் அரைத்து தடவவும்.

வாத சுரத்துக்கு நொச்சிலை சாத்திலிடவும்.

சித்த சுரத்துக்கு மாட்டுக் கோமியத்தில் கொடுக்கவும்.

க்ஷயத்துக்கு அமுக்கிறுங் கிழங்கு சாத்தில் கொடுக்கவும்.

ரத்த பித்தத்துக்கு பிறமியத்துக்கு அமுக்கு கொர்க்கத்திலிடவும்.
உப்புசம் இருமலுக்கு நெய்யில் கொடுக்கவும்.
செழுப்ப சுரத்துக்கு கோமியத்தில் கொடுக்கவும் இல்லாவிட்டால் அமுக்குரான் சாத்தில் கொடுக்கவும்.
நீர் கட்டுக்கு கழுதை நீரில் கொடுக்கவும். சர்க்கரை போட்டு கொடுக்கவும்.
வெள்ளை பிறமியத்துக்கு நெய்யிலிடவும்.
உன்மத்துக்கு நல்ல வெல்லத்தில் கொடுக்கவும்.
குஷ்டத்துக்கு கால் முடியில் அரைத்து தடவவும்.

இத்துடன் ஒரு சுவடி முற்றும்.

<u>விக்கல் சன்னிக்கு மருந்து</u> :-

அசமதாகம், திப்பிலி, ஏலம், லவங்கம், கொத்தமல்லி, கொடிவேலி வேர், நாகப்ப இருவேலி வேர், சுக்கு, குருசானி ஓமம் மிளகு, இந்துப்பு இவை காசிடை கூட்டவும். திப்பிலி, வில்வப் பத்திரி, சாற் மாதளம் பிஞ்சு கூட்டவும் தீரும்.

<u>இருமலுக்குப் புகை</u> :-

கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, தேவதாரி, இவை பொடி செய்து சீலையில் பரப்பி திரிச்சு விளக்கில் போட்டு திரி புகை பிடிக்கத் தீரும்.

<u>நீரடைப்புக்கு சுரத்துக் கெல்லாம் உச்சிதமான மருந்து</u> :-

ஒரிலைத் தாமரை வேர், அரசம் பிசினும் அரைத்து பாலில் கொடுக்க நீர் விழும். கல்லுகளெல்லாம் விழும்.

<u>சுரத்துக்கு</u> :-

சாதிலிங்கம் விராகனிடை.க, நெல்லிக்காய், கெந்தகம் விராகனிடை.க, இது இரண்டும் பொடி செய்து குழாலில் வைத்துக் கொண்டு, சுக்கு கசாயத்தில் விடவும். வெட்டு மருந்து கசாயம் பெரு முட்டி, சித்தாமுட்டி நன்னாரி யிதில் கொள்ள சுரம் உடனே நிற்கும்.

<u>கபால இடிக்கு</u> :-

சுக்கு, மிளகு, திப்பிலி, மரமஞ்சள், நல்ல மஞ்சள், சதாகுப்பி, கற்பூரம் இது நுணுக்கி பொடி பண்ணி சீலையில் தடவி சுருட்டிக் காய வைத்து பிடிக்கவும். மண்டை இடி தீரும்.

<u>சன்னி வாத சுரத்துக்கு சன்னி ஆனந்த வயிரவன்</u> :-

<u>பேதி யானந்த வயிரவன்</u> :-

யெத்த சுக்கு அரத்தையுடன் காசம் யெறக்கல வேற் நாற்தையுடன் கூட்டி யொத்த நொச்சி தன்னெகந்து பொரித்த ீர் இரு நாழியும் சேர்த்து எரித்த பின் செப்புடன் கொள்விறு சாந்தம் இது கேளும் சன்னி வாத சுரம் போமே.

<u>சன்னி ஆனந்தம்</u> :-

சாதிலிங்கம், வெங்காரம், நாவி, திரிகடுகு, ரசம் இவை ஐந் வகைக்கு விராகனிடை.உ, எலுமிச்ம் பழஞ் சாற் விட்டரைத்து சிறு பயறளவு உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சி சாத்திலிட சன்னி பதின்மூன்றும் தீரும்.

<u>பேதி யானந்தம்</u> :-

சாதிலிங்கம், நாவி, மிளகு, திப்பிலி, வெங்காரம், கெந்தகம் வகைக்கு விராகனிடை.உ, நேர்வாளம் விராகன்.ரு, கடுக்காய் தேனி விராகனிடை.ரு, கூட்டி எல்லாம் எலுமிச்சம் பழ சாற் விட்டு இரண்டு சாமமரைத்துக் கொண்டு வாத சுரம், பித்த சுரம், பழைய சுரம் இதுகளுக்கு இஞ்சி சாத்திலிட்டு

சுவாச காசத்துக்கு ஆடாதோடை சாத்தில் கொடுக்கவும். அதுவு மல்லாமல் ஆவாரை பூவை அரைத்து குளிகை வைத்து கொடுக்கவும்.

குன்மத்துக்கு :-

ஏலம், கோஷ்டம், அதிமதுரம், கருஞ்சீரகம், நல்ல சீரகம், தாளிச புத்திரி சிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, குரசாணி, ஓமம், அசமதாகம், கடுகு, காந்தம் காயம், அரிசி, சுக்கு , மிளகு, திப்பிலி, மஞ்சள் இவை யெல்லாம் இள வறுப்பாக வறுத்து பொடி செய்து தேனில் கொள்ள வயறு வேதித்தால் உப்பு கஞ்சி கொடுக்க குணமாம். வாய்வு தீரும்.

வயற்றில் சர்வ வியாதிக்கும் திப்பிலி சூரணம் :-

திப்பிலி பலம்.உ, சுக்கு பலம்.உ, செவியம் புலம்.௧, சித்திர மூலம் பலம்.ல, வாய் விளங்கம் பலம். ¾ காயம் பலம்.வ, ஏலம் பலம்.௩ இலவங்கம் பலம்.௩, கையாந்த கரைப் பொடி பலம்.௩, லோகம் பலம்.௧, மத்ததெல்லாம் எடைப்படி கொண்டு சூரணம் பண்ணி சர்க்கரை கூட்டிக் கொள்ள இருமல் வாய்வு, மந்தார சன்னி சகல ரோகமும் தீரும்.

குன்ம வாய்வு கட்டி கரைய :-

வெள்ளை வெங்காயம், சீரகம், அதிவிடையம், அக்கிரு காரம், அசமதாகம் காயம் இதை வறுத்துப் பொடி பண்ணி தேனில் வெருகடி பிரமாணம் கொள்ள கட்டி கரையும்.

குலைக் கட்டுக்கு :-

பறங்கிப் பட்டை பலம்.ங, பிறப்பன் கிழங்கு பலம்.ங, வெத்திலை.ருய, பசுவின் பால் படி.௩ புதுப் பானையில் பாலை ஊற்றி அதின் மேலே சீலை நனைத்து வேடு கட்டி மேலே வெத்திலை அடுக்கி சூரணத்தை பரப்பி அப்படி அடுக்காக பரப்பி மேலே சட்டி கொண்டு மூடி வெத்திலையும் பிட்டாக பிசைந்து சாப்பிட மிச்சா பத்தியம்.

சிலுனி ஆனந்த வயிறவன் :-

நாவிலிங்கம், திரிகடுகு சமானம் கூட்டி பழம் சாத்தில் அரைத்து உருண்டை செய்து இஞ்சி சாத்திலிட சுரம் தீரும்.

பித்த சுரத்துக்கு முலைப் பாலிலிட தீரும்.

சுரம் ஆனந்த வயிரவன :-

சாதிலிங்கம், நாபி, கெந்தகம், வெங்காரம், திரிகடுகு வகைக்கு விராகனிடை. நேர்வாளம் சுத்தி பண்ணி எ இவை எலுமிச்சஞ் சாற்றில் இரண்டு சாமமரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி இஞ்சி சாத்திலிட பயித்திய சுரம், புது சுரம், பழைய சுரம் குளிர் சுரம் நிற்கும்.

சன்னி வாத சுரத்துக்கு :-

தேனிலிட மேலிளப்பு இருமலுக்கு ஆடாதோடை சாத்திலிட .

வயறு கழிச்சலுக்கு: ஆவாரம் பூசாத்தில் வெண்ணெயிலிட.

அக்கினி குமாரன் :-

ரசம், வெங்காரம்; நாவி வெள்ளைப் பாஷாணம், கெந்தகம்; நேர் வாளம் ஆக வகை இவை சமானமாக கூட்டிக் கையாந்த கரைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச் சாத்தில் திப்பிலி கசாயத்தில் சுக்கு கசாயத்தில் கொத்தமல்லி கசாயத்தில் ஆடா தோடை பிட்டு ரசம் இதுகளில் சரீர பலம் அறிந்து வியாதி குமறிந்து ஒரு உருண்டையிட இப்படி மூன்று நாள் இடத் தீரும் வியாதி வாத சுரம், பித்த சுரம், சேத்தும சுரம், சன்னி சுரம் மூன்றுநாள் மாறல் அசீரண சுரம், வாய்வு, சுரம், தோஷம் அமுர்தம் விஷம் இவையெல்லாந் தீரும். பத்தியம்.

சுரம் 64-க்கு மாத்திரை :-

சுரம் 64-க்கு மாத்திரை:-

திரிகடுகு, வேப்பிலை சாறு விட்டரைத்து குண்டு மணி பிரமாணம் உருண்டை பண்ணி வேப்பிலை சாத்தில் ஒரு உருண்டை இட பேதி கண்டால் நிறுத்தவும். சுரம் 64ம் தீரும்.

அயில் பட்டை சூரணம்:-

அயில் பட்டை சாட்டரணை வேர், முக்கரட்டை பலம்.க இது எல்லாம் சூரணம் பண்ணி வெருகடி பிரமாணம் கொள்ள இதுக்கு தீரும் வியாதி வாத குன்மம், வலி குன்மம், பித்த குன்மம், எரி குன்மம், கார குன்மம், சத்தி குன்மம், சேத்தும குன்மம் வாந்தி குன்மம், சோகை குப்பை நீரும்பல், நீர்க் கோர்வை, குடல் வாதம் சோகை தீரும்.

உப்பு, ஒரு பங்கு பிரண்டை இரண்டு பங்கு கலந்து சட்டியிலிட்டு சீலை மண் செய்து அடுப்பிலே இரண்டு சாமம் எரிக்க பற்பமாம். நெய்யில் கொடுக்க அ விதமான குன்மம் தீரும்:

புள் செட்டை கிறந்திக்கு:-

மாவுலிங்கம் இலை.எ அரிந்து வெந்நீரில் உள்ளுக்கு கொடுக்க பத்தியம். பசுவின் பால் சோறும் அன்னம் பண்ணவும். உப்பு, புளி ஆகாது.

கிறந்திக்கு:-

சாதிக்காய்.ய, கிராம்பு.ய, ஏலரிசி விராகன்.க, திப்பிலி விராகனி:க, கண்டந்திப்பிலி விராகனிடை.உ, கசகசா விராகன்.கஉ, வங்காள மஞ்சள் விராகன்.கஉ பறங்கிப் பட்டை விராகன்.ஙஉ, சிகப்பு கோழிக் கீரை படி.க, இவை யெல்லாம் பொடி செய்து இலை கூடப் போட்டு எலுமிச்சம் பழம் சாற்றில் அரைத்து உலர்த்தி முறல் கொண்டு வந்து அதை எடுத்து காய போட்டு சரக்காக்கி இடித்து அந்த தூள் பலம்.உ, பரவுப்பு பலம்:க, இது இரண்டும் எலுமிச்சம் பழம் சாறு விட்டு அரைத்து எடுக்க மெழுகாகும். வாதத்தால் கொண்ட பிடுங்கல் தீரும்.

பேதி மாத்திரை:-

நேர்வாளங் கொட்டை.உய, கடுக்காய்.சய, சுக்கு.ய, நேர்வாளத்தை சட்டியில் காய வைத்து வறுத்துக் கொட்டை வெடிக்கிற பக்குவத்தில் எடுத்து இது மூன்று வகையும் நிம்பழம் சாற்றில் அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இள வெந்நீரில் ஒரு உருண்டை கொடுக்கவும் பேதியாகும். சகல பேருக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கத் தீரும்.

பேதி ஆனந்த வயிரவன்:-

சாதிலிங்கம், நாபி, மிளகு, திப்பிலி, வெங்காரம், கொத்தமல்லி வகைக்கு விராகனிடை.உ நேர்வாளம் விராகனிடை.ரு, கடுகுரோகணி விராகனிடை.ங, இது எல்லாம் கூட்டி எலுமிச்சம் பழம் சாறு விட்டு இரண்டு சாமமரைத்து குண்டு மணியளவு உருண்டை பண்ணி உலர்த்தி சன்னி வாத சுரத்துக்கு இஞ்சி சாற்றிலிட சுவாச காசங்களுக்கு ஆடா தோடை சாற்றிலிட சர்வ விஷங்களுக்கு அவரி சாற்றிலிட குன்மத்துக்கு கோரோசனை. கோட்டம் அதிமதுரம், திப்பிலி, தேவதாரம், சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுகு ரோகணி அரத்தை சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு வகைக்கு பலம். கொக்கெண்ணெயில் எரித்து அரைத்துக் கொண்டு பின் இதுகளுக்கு கொடுக்கவும். தொழுப் பிடுங்கி வந்த கொட்டைப் பாக்களவு சாத்தரைத்துப் புருந்தலரிசி குட்டில் கலந்து மூன்று வேளை கொடுக்க சுரமும் தீரும்.

நீரழிவுக்கு:-

ஆவாரை வேரை கூலைக் கொம்பு தேனும் பச்சைப் பாலில் கொடுக்க தீரும்..

நீரடைப்புக்கு: பிஞ்சுக் கடுக்காய் இளநீர் விட்டரைத்து அடக் குடித்தால் தீரும்

விடும். நீர் விடும்.

__வெள்ளைக்கு மருந்து:-__ 22.2.63.

இவ்வங் கொழுந்து கொண்டு வந்து இடித்து சாறு பிழிந்து மூன்று நாள் காலம்படி சாறு கொள்ள நிற்கும்.

பத்தியம் கடினம்.

__மாந்த சுரத்துக்கு:-__

சீந்தில் தண்டு கடுக்காய் சிவதை வேரும் கத்தாரஊக் காய், சுக்கு ரோகணியும் காயநீரில் கலந்திட்டு ஏந்திக் கழ முலையாள் இளநீரை விட்டொன்றுக்கி கொள்வீரய் மாந்தம் போகும். வயறு கழியும். வலன்மையாகும். ~~[illegible]~~

__மேகம் 20-க்கும்:-__

கலியாண நீரு ஆம்பல் நெல்லிக்காய் சாறு படி.க, சர்க்கரை பலம்.உரு கரைத்த வடித்த கொள்ளு வேர் பட்டை பலம்.க, அரைத்து பாகாய் காய்ச்சி இதில் திப்பிலி, கொடி வேலி வேர், கொத்தமல்லி, வெப்பாலை அரிசி, விழாலரிசி, ஏலம், ஓமம் சீரகம், மிளகு வகைக்கு பலம்.க, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய் வகைக்கு பலம்.உ, விடத்தேரி பூ படி.க இடித்து வஸ்திர காயம் பண்ணி பாகில் தூவி நல்லெண்ணை படி.ய, கூட விட்டு கிண்டி இறக்கு காலமே ஒரு நெல்லிக்காய் அளவு கொள்ள பிரமேகம் .உக உடம்பு எரிப்பு எலும்புருக்கி கிரந்தி பாகம், போரே பெரும்பாடு எந்த வருகிறதும் தீரும். புளியே ஆகாரை பக்குவகம் கட்டு கொள்வும் பத்தியம் கடினம்.

__வண்டு கடிக்கு தயிலம்:-__

நன்சி வேர், சங்கம் வேர், விழுதி வேர், காட்டுக் கோவை வேர், தகரை வேர், வேப்பம் வயிறம், கொடிவேலி வேர், பூவரசம் வேர், நொச்சி வேர், குட்டிருய் வேர் கூட்டி தயிலமிறக்கவும். காசளவு திட்டம். நாள் தின்னவும். சிலம் வண்டுகடி பட்டை வண்டு இது வெல்லாம் தீரும்.

__மேகோதரத்துக்கு:-__

சீனிக்காரம், வெங்காரம், சவுக்காரம், நவாச்சாரம், படிகாரம், இந்துப்பு பொட்டிலுப்பு சீயக்காய், கல்லுப்பு கடுகுரோகணி கடுக்காய், பெருங்காயம், சித்தரத்தை கொடிவேலி இது இடித்து சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு தும்மட்டிக்காய் சாறு படி.க, மாவிலிங்கப் பட்டை, சதுர கள்ளி பட்டை இது நருக்கிச் சாற் வாங்கி எரித்த பதத்தில் சூரணம் பண்ணிப் போட்டு விளக்கெண்ணை கொஞ்சம் விட்டு லேகிய பதத்தில் இறக்கி கௌஞ்சி கெச்சுக்காய் பிரமாணம் கொடுக்க பத்தியம் கடினம். உப்பு, புளியில்லாமல் மோர் நீர் காய்ச்சி சாகம் கொடுக்க பசுவு மோர் கூட வென்னீர் கூட்டவும்.

__இரத்த பாண்டு ரோகம் செய்யும் குணம்:-__

இருக்கையில்லை இளைப்பு முண்டாம். நெஞ்சு அடி துடிக்கும். மருவியே வயறு காணும் மந்தமே பற்றிருக்கும். வெளுத்து கிடு கிருத்த முழிகள் வெளுத்து வீங்கும். மருவி பித்த பாண்டு ரோகமென்று உரைக்கலாமே. இந்தக் குணமெல்லாம் பார்த்து பித்த பாண்டு குணமென்று அறியவும்.

__இது வனமூலிகை:-__

கையாந்த கரைச் சாறு காட்டு மல்லிகைச் சாறு, முசுமுசுக்கை சாறு, முடக் கொத்தான் சாறு, ஆடாதோடை சாறு, குப்பி சாறு, நிலாவரை சாறு, நொச்சி சாறு வேலிப் பருத்தி சாறு, எலுமிச்சன் சாறு, பிரமி இலைச் சாறு வகைக்கு படி.வ, கடை சரக்கு திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், தேவதாரம், அசமதாகம், ஜாதிலிங்கம், கொத்தமல்லி, கடுகுரோகணி அதிமதுரம், மிளகு, கோஷ்டம், அரத்தை, சீரகம், கடுக் காய் திரும்பு, காந்தம், கிட்டம், அரப்பொடி வெள்ளரி, பேய்புடல், நெல்லி முள்ளி வகைக்கு பலம்.க இடித்து அரைத்து அந்த சாத்தில் போட்டு லேகிய பதமாக கிண்டி

ஒளஷதியம் கொடுக்கிற சமயத்தில் நய பலம் சர்க்கரை தேனும் விட்டுக் கிண்டி இரண்டு நேரம். ஒரு நாள் பாக்களவு கொள்ள பாண்டு விழ பாண்டு மஞ்சள் காமாலை, பித்த குன்மம், வாய்வு இதுகள் தீரும். பத்தியம் கடினம்.

புண்ணுக்கு:-

ரசம் பணவிடை, பசு விராகனிடை, வெள்ளை சாட்டறனை வேர் நருக்கி சாற் விட்டு தலை ஓடு ஒரு காசிடை அரைத்து வழிக்கக் கொண்டு எந்த புண்ணுக்கும் போட எரிந்தாலும் அனலில் காச்ச தீரும். கோரோசனையும் நெருஞ்சி வேரும் பொடி செய்து வாயில் போட வாய் திறவாள். தலையில் தேய்க்க வருவாள்.

கண்ணில் எழும்பின வியாதிக்கு:-

கடுக்காய், வசம்பு, கோட்டந் திப்பிலி, மிளகு, மரமஞ்சள், சங்கு பொடி, தானிக்காய், மஞ்சேசிலை வகைக்கு விராகனிடை, வெள்ளாட்டுப் பாலில் அரைத்து கண்ணிலிட நாசம் படலந் திமிர் கிரு நெரிமேல் தெளிப்பு மாசந் தீரும். ஐம்பது பூவாதல் நய நாள் போடவும்.

சர்வ வீக்கத்திற்கும் கசாயம்:-

மாமாலை தண்டு சீந்தில் தண்டு கோவைத் தண்டு நன்னாரி நெருஞ்சி சிறு கீரை நீர் முள்ளி கண்டு பறங்கி, சுக்கு, சித்தரத்தை, தாளிச பத்திரி இவை செய்ய தீரும்.

வில்வ வேர் தயிலம் மருந்து:-

சாந்தமாம் வில்வ வேர் தயிலம் கேளும். தானன வில்வ வேர் பலந்தான் பத்து பாய்ந்த மாம் பிடித்ததனை பதக்கு நீரில் பருவாக காய்ச்சி யத்தே வெட்டொ நருக்கி போயிர்க என்னை நாழி விட்டு புகழ கெழும் பொகராகே சந்தனந்தான் அரைத்துப் போடு புண்ணியனே இதை எல்லாம் ஒன்றாய் கூட்டி புதிசமாய் தனலிலிட்டு மெழுக்காய்க் கொள வெற்றி மா வரும் பதத்தில் வடித்து கேளும். வாகாத முழுகி வர வண்மை கேளு.

வரிசையாய் முழுகி வர பித்தம் போகும். வரிசை பெற மெய்யிலுள்ள உஷ்ணம் போகும். இளமை பிற வாக்கி வித்தும் மேகம் போகும். இரு கண்ணும் தெளிவு தரும். இருமல் போகும். வுளமை தனில் ரெத்த பித்தம் ஓடிப் போகும். உறவறச்சி அள சுரங்கள் ஓடிப் போகும். தளமாக மூஷ்டம் போம். தயிலம் சொன்ன சம்பிரதாமாய் காயமடிா தணிந்த போமே.

எலி கடிக்கு:-

மாவிலிங்கம் பட்டையை வெட்டி மேல் பிறணி சீவிப் போட்டு ஒரு கொட்டை பாக்களவு நெய்யில் நல்லெண்ணை விட்டுக் கொடுக்க தீரும். வெய்யில் படாமலிருக்க இது கை கண்டது. இந்த பட்டை தூளாக்கி பசும் பாலில் கொள்ள எலி கடி தீரும். சுக்கு, கருஞ்சீரகம் வகைக்கு பலம் ரு இதை பெர்ன் வறலா வைத்து கசாயம் வைத்துக் கொள்ளவும் தீரும்.

வீக்கத்துக்கு:- ஒன்றரை வீசம் படி சாராயம் கொண்டு வந்து தெசாவறம் அரைத்து மூன்று நாள் கொள்ளவும். மேலுக்கு ஊமத்தை சாற் பூசவும். பத்தியம்.

புருஷனுடன் வாழாதவளுக்கு:-

பொன்னரி விராகனிடை. க, கற்பூரம் விராகனிடை. ரு, முள்ளிக் கத்திரிக்காய் சாறு விட்டரைத்து தாழம்பு தாம்பு நீர் விட்டு அரைத்து நல்லெண்ணையில் மத்தித்து தலையில் தேய்க்கவும். புருஷனுடன் கூடி இருப்பாள்.

காமாலைக்கு மருந்து:-

சிக்காமனைக்கு இலை அரைத்து பசுவின் கோமியத்தில் கொடுக்கவும் தீரும். பத்

ஊர்தக் களிப்பு :-

அத்தி முகனைத் துதித்து நல்ல அன்பான வல்லாதியின்பமாய் சொல்வேன்: சித்ர மூலம், வெள்ளறுகு, நல்ல சிவனார் வேம்புடன், சங்கம் வேர், குப்பி முத்தின தேங்காயின் வித்து, நல்ல மூலமாம் கெருடன் அமுக்கிரு வேரும் புத்தில் முளைத்த வெள்ளெருக்கும் நல்ல சதிரான செங்கத்தாரி குண்டி வேர் பட்டை உச்சித வெப்பாலைப் வித்து நல்ல ஊர்வான நீர் சுண்டி பிரப்பன் கிழங்கும், சித்த மகிழ்கரிய சீரகமும், நல்ல சிறப்பான கானக சீரகமும் காரும் முத்தின பூத விருக்ஷம், நல்ல முதலான வாத கரப்பானிடை பட்டை கத்தி கெந்தகமது திருசு நல்ல சதிரான சுக முத்து சத்தமும் சேர்த்து சித்திரமாக எடுத்து நல்ல சிறப்பான வகைக் கொரு பலமும் நிறுத்து விஸ்தாரமான பனைவெல்லம் நல்ல விளங்கிய என்று வகைக்கு சேர் கொண்டு முத்தின செங்கொட்டை நூ ௮, நல்ல முசிமும் பறங்கிப் பட்டை, பலம்.உ, கைத்திடமாக பிடித்து பின் கர்த்தாவை நோக்கி முன் தீபங் கொடுத்த சித்திர வல்லாதி யென்று முனி செப்பினர் சீடருக்கு உபதேசமாக பத்திரமாக எடுத்து புது பாண்டத்தில் வைத்து நிறை பாக்களவு உருண்டை மண்டலம் இரு போது கொண்டால் நல்ல மார்க்கமாம்: வியாதி யே வமுத்துரைப் போமே.

முத்தின சூலை சிரந்தி, நல்ல முடக்கு, கடப்பு பிடிப்பு, கியிர், பத்தின
பத்தின மேகங்கள் வாதம் நல்ல பாங்கான கை தனி ஊற வெருப்பு
வத்தின உடம்பு சிறங்கு நல்ல வகையான புழு வெட்டு கடி விஷம் முதலாய்

சொத்தி பிறித்த வெள் குஷ்டம் வுண்டும் சொல்லாமல் போகுமே வல்லாதி கண்டால் பொத்தி கடி போல் வெடித்து நல்ல புண் போவுடம்பெல்லாம் வண் போலரித்து கொத்தி கிழித்தது போலே நல்ல சூடா பாதத்தில் கீழ்ய் வெடித்து அத்திக் கெறந்தி ஜெனக்காய் என்று ஆறப் பறங்கிப் புண் ஆன தேய்க் கெல்லாம் சித்திர வல்லாதி கண்டால் நல்ல சிக்கின்ற பக்ஷி பறக்கின்றுப் போலே பத்தியமாய் சொல்லுவேன் கேளும்.

நல்ல பாசிப் பயறு, துவரம் பருப்பு, முத்தின கத்திரி பிஞ்சும்,
நல்ல முருங்கையின் பிஞ்சம் அரைக்கீரை தாளம் சாதாவின் பாலு நெய்மோரு
நல்ல சதிரான வெள்ளாடு விரால் மீன் குறவை சித்திர ஆமணக்கெண்ணை
நல்ல சீருள பொது முழுகு வாய் எண்ணை யித்தனை நோய் தீருமென்று ரிஷி.

இன்பமாய் சரக் சொன்னுறவர். பாகம் வல்லாதி முற்றும்.

மகா வல்லாதி செய்ய மருந்து :- *(Can be considered)*

சொல்லுகிறேன் கேளப்பா மகா வல்லாதி செய்மெல்லா மெச்சுகடா இது தானப்பா முனி உரைத்த வல்லாதி சொல்லக் கேளு கேளப்பா சாதிலிங்கம் பலம். நதான் மூன்று சிறந்ததொரு நெரி பாஷாணம் பலந்தான் மூன்று கடிதமுள்ள ரசம் நாவி பலந்தான் ஞ்சி பொரியன வெண்காரம் பலந்தான் மூன்று சுருககான தாற்கமர பலந்தான் மூன்று கூறின என மருந்தொன்றுக்கு சுத்தி பண்ணத்து வாங்கே.

வாங்கியே போகாமலின்னம் சரக்கு சொல்வேன் கேளப்பா பறங்கிப் பட்டை இடித்து தான் சேர் தானென்று சென்ற தொரு எட்டி கொட்டை சேர் தான் மூன்று அடுத்த தொரு நீர் முத்து சேர் தான் மூன்று அரிதான செங்கொட்டை சேர் தானஞ்சு வனித முன்னோர் சாதிக்காய், கிரம்பு பலந்தான் மூன்று மிதமுள்ள வால் மிளகு பலந்தான் மூன்று கிருதமுள்ள கருஞ்சீரகம் பலந்தான் நாலு புகள்கின்ற தானிக்காய் சேர் தான் மூன் படர்ந்த தொரு செந்தரி பட்டை இடித்த நாள், சேர்தான் மூன்று சிவ சிவ சிவன் வேம்பு சரியாய்க் கூட்டே.

கூட்டின மருந்தெல்லாம் ஒன்றாய் சேர்த்து ஆகி யென்ற குருவைத் தான் மனதில் வைத்து அறகர கல்வுறலில் ஆயிரம் தரம் இடித்து வாங்கி இடிக்கையிலே நல்லெண்ணை இரண்டு படி விட்டு இடித்து வாங்கே. வாங்கியே பாக்களவு உருண்டை செய்து நோய்களுக்கு இந்த வல்லாதி உருண்டை கொள்ளே.

கொள்ளவே நோய் தீரச் சொல்லக் கேளும் கொடிதமுள்ள பதினெட்டு குஷ்டம் தீரும். முடக்குகின்ற சூலை அப்பத்திரமும் தீரும். பறந்து கொடா மேகத்தின் பிறந்த

கடி விடமுந் தீரும். கிரண்டவுடன் கிரணி ஆறு வகையும் போச்சு. வெகு நாளாய் நின்றதொரு கர்மம் போச்சு. சடலத்திருண்டான கடிப்பு போச்சு. வாதாதி வந்த நோய் மேகமெல்லாம் போச்சு. காயங்கு நித்த கோட்டா கலங்க வேண்டாம். மூண்ட தொரு மண்டலமே கொண்டாயானால் அறகரு மாந்தளிர் போல் மேனியாச்சு. நரை போகும் ஆகாது. புளியாகாது. கள்ளப்பா மாமிசத்தை புகையிலையும் தள்ளி செகத்திலே வயித்தியர்தா யின்றால் கிட்டாதப்பா பாடினேன் ஆயிரத்தி நாத்துக்குள்ளே மகா வல்லாதி சுருக்குதனை கண்டல் பாடும் மகா வல்லாதி முற்றும்.

கண்_மருந்து:-

வானத்தின் மீதும் வனமறிவான் கன்னிகும்
யெனத்தின் கொம்பும் யிறவரிவுான் நெஞ்செலும்பும்
கூனி முதகெலும்பும் குறுக் கருத்தின் பல்லும்
கானக் குறத்தி முலைப் பால் விட்டரைத்து கண்ணிலிட காச மாந்தொண்டா தாரும் நலமாகப் போகு மென்மூர்.

பொன் அரிதாரம் பலம். ச கட்டி அரிதாரம் பலம். , நொச்சியிலை பலம்.ச, சாதிலிங்கம் பலம்.உ, திருகார் சிங்கு விராகனிடை.உ, இதசுஊக் கலியான பூசனிக்காய் சாத்தில் சுருக்கு கொடுத்து மறுபடி சித் கட்ட சுத்தி செய்து அதின் பிச்சு நீர் விட்டு சுத்தி செய்த கெசபுடம் முகையிலிட்ட பசு வெண்ணெயில் பணவிடை கொள்ள சர்வ மதன மந்தார காசம் தீரும். கை கண்டது. ~~ரெத்த பிரமியத்துக்கு~~

ரெத்த_பிரமியத்துக்கு:-

புளியறளை வேர், நன்னாரி வேர், பொன்குசுகன்னி வேர், ஒரிலைத் தாமரை இலை பசும் பால் கலந்து சர்க்கரை போட்டுக் கொள்ளவும்.

அகஸ்தியர்_குழம்பு:-

available in published literature

பேசியே மருந்த கேளும் பெருங்காயம் கடுகு இந்துப்பு
வீசி மறம் பொற காறம் விசு மசேசிலையும் கட்டி
ஆசிலந்திப்பிலி அரிதாரம் கடுகுரோகணி
மாசிலா கருஞ் சீரகமும் வகை வகையா கழஞ்சு கூட்டி வாளமும் வருத்தப் பாதி காங்கி யே பச்சை பாதி சமன் முனை நீக்கிப் போக்கி ஒங்கியே மோரும் சோமம் உண்டு நீ அரைத்துக் கூட்டே. கட்டியே மருந்து பேர் அகஸ்தியர் குழம்பதாகும்.

ஈட்டிய விரை யஞ்சுக்கு யிரும் பல்லி கடுக்காய் சாறு
வாட்டியே குளிர் சுரங்கள் வகை அக்கு மிகு காளில்
பட்டி விலத்த மூலம் ஆவி நெய் மெத்தை பாலில்.

பாலிலும் மொழியர்ய் ஆகி கேளும். பாண்டு மகோதரம் பெருவயறு
மேலினி யாம்பல் சோகை முளகு தான் வெள் வெங்காயம்
சலலவே சன்னிக்கெல்லாம் தேன் யிஞ்சி சாறதாகும்
மேலெரும் சன்னிக் கெல்லாம் வேம்பினில் கன்னில் தீட்டும்.
யிடு கன்னில் கடுகில் யாரி கடுகியே வீங்கிடும்
கத்தாழை சோறு வடிவையில் சந்தனங்கள் வைத்த நீ கட்ட மாறும் படு பருப்பிளவை வாளை பக்கரையாப்பு புண்கள் விடும் பெரு சிலந்திக்கெல்லாம் உமி நீரில் மிகவும் பூசே. பசிடு முலைக் கொக்கும் கூசிய அங்க குலை மந்தடங்கள் நொச்சி சாறு பாசமாம் வாதம் வாய்வு பலமான நோய்களெல்லாம் மாசில்லா யிஞ்சு சாறும் மரு மரு சரக்கு நொச்சி பாரே.

பாரப்பா கபால வலி முதலா பிசாசு மே பறக்கும் பாரு திரி புகை நீர்க் கடுப்பு நீர் சரப்பு, நீர் கல்லடைப் புன் தாழை விழுத தரு சிறந்தி பறங்கிப் புண் முதலானது தீரும். குப்பி சாறு தனில் தீருக் கடுப்பு பல விடமும் தீரும். தீரும் கண்டவாறே பிடிக்கும் திரிபுகை முன்னரைத்த அம்மிதனில் பிறட்டிய சீலை தனில் யிடிக்கும் வலிக்கும் தரற் வாதம் யிக் குமல்லிக்கு மதி திரி கட்டி கொடுக்குங்கிலியம்

வெள் வெங்காயம் கொடிய களச்சி முசுமுசுக்கை படிக்கும் சன்னி பதினெட்டு அநுபான
செயலால் விதியார்.

<u>பிள்ளை உண்டாக</u> :-

சொன்னா மடவாள் தங்களுக்கு சுகமாய்க் கெற்பம் வரும்படி கேள்
மின்னே அரசன் கொழுந்துடனே மிகவே ஆவின் பால் கூட்டி
முன்னோர் குழம்பில் பணவிடை தான் மூட்டி மூன்று நாள் கொடுக்க
பொன்னே புத்திருண்டாகும். புவியோர்க்குறுதி கண்டிரே.

கண்டிற் நாவல் பட்டை தனில் கருப்பாட்டு பால் தனில் சுரசம்
கொண்டே சீரகம் பொடியுடனே கூட்டிக் குழப்பி பணவிடை தான்
உண்டால் குதகம் தன்னில் வரும் உயர்ந்த வாய்வும் உள் தீரும்
வண்டார் குழல் சேர் மடமானே மலை சேர்முனி தான் வகுத்ததுவே.

மேகநாராயண பற்பம்

வகுத்த பிரமன் வகையாலே வருமே குசிகா வாதமுடன் பிரட்சியான கட்டிகரம்
தீரும் வகைதான் நீர் கேளும் பகுத்த நொச்சி சாருடனே பஞ்சாறதை மிளகு சுக்கு
தொகுத்த குழம்பில் பணவிடை தான் கொள்வீர் சொன்னேன் கொள்வீரே கொள்ளும்
பிறதி பசுவுக்கு கொடுக்கு மருந்ததனைக் கேளும். உள்ளி முருங்கைப் பட்டையுடன்
உயர்ந்த புங்கு எருக்கம் வேர் வில்வரி தா திருகு கள்ளி விரை சேர் இஞ்சி சாரசமதில்
தெள்ளுங் குழம்பில் பணவிடை தான் சேர்த்துக் கொடுக்க வலி தீரும். வலியே செய்யும்
நீர்க் கடுப்பு மாற மருந்து வகை கேளாய் நவியா மிளகு பொரிகாரம் நன்று பொரிய
கண்டுடனே மெய்யெரெண்டு விராகனிடை மெய்யா ஆவினெய் தனிலே புளியறதை குழம்பில்
பணவிடைதான் புகழ்ந்தே கொடுக்கப் பிணி போம் விதியே விதியால் மருந்து இது
வல்லால் வேறே மருந்து வேண்டாங் காண் பதிய மிதக்கு அறிப்பறிந்து அநுபானம் கண்டு
செய்தால் சதியாய் வந்த நோய்களெல்லாம் தானே மெகந்து ஓடிடுமே. மதியாய்
நோய்கள் தீர்ந்து விடும். வாழ்வாய் சொன்னார் விரை முனியே.

விந்து வேள் குருமுனிவந் செயநீருக மேக் நாரராயணன் செந்தூரம் செப்பக் கேளும்
கெந்தக அந்த சூதங் கெடியான சாதிலிங்கம் பலந்தான மூன்று அந்த மால் தேவிராகன்
இரண்டு ஆனந்த நொச்சியிலை ரெண்டரையகாகும். பைந்தொடி வாய் சுத்தி பண்ணி நிறுத்துக்
கொண்டு பண்பாக கல்வத்திலேத்து வாயே.

யேத்துகின்ற யெருக்கம் பாலை புறசெலைச் சாற் யிலை நம்பை செருப்படை சாற் செம்
முள்ளிச் சாற் பத்த மாதளை யிலைச் சாற் அந்தப் புச்சாற் புகழ் முருக்கன் புச்
சாத்தில் வகையொ வேண்டில் நேத்தியதாய் சாமமொன்று அதற்கு வாங்கி
குப்பிக்குள் மணமே செய்து வாயி திறவனாரிலா மருந்தே பூட்டி வாயி பகலங் கொண்டே
மணமும் செய்வாயே.

செய்த பிற்பு வல்லவற கட்டி தன்னை சேர்க்கதல் விறகுக்கு மணலே கொட்டை
வைத்திட்டவே குப்பி தன்னை நாட்டி வைத்து பதறுமல் மேடமட்டும் மணலே மூடி சயமராய
அடுப்பேத்திலாறு சாமம் அரிசமல் முன் போலே எரிக்க நந்து வெய்யவே வயிறவன்
பூசை செய்து வேண்டியே குப்பியை எடுக் கொட்டத்துக கொள்ளே.

உடைத்தெடுத்த <u>செந்தூரம் பற்பமாகும்.</u> உத்தமனே முருக்கம் பூ நிறமே யாகும்.
உயருக திரிகடுகு, கண்டங்கத்திரி, ஏலபத்திரி, திட்டம்படவே புட்டு வைத்த பிழிந்த தேனில்
செந்தூரம் பணம் பாதி கொடுத் பத்து அடர்ந்த நேர மூன்றும் தீரும் வியாதி
சொல்லரியக் கேளும் . காசமிதெல்லாம் போமே.

போகுமே மேக மிருமல் சுவாச காசம் பொல்லாத மந்தார சேத்துமம் ஓடும்
மூர்ச்சை மித முன்னே கொல்லும் யிளப்பு சன்னி மூர்சையுடன் செயகாசம் முறிந்து
போகும். வாக்குள்ள திப்பி தேகர் பத்த நாறுன்ன வண்டுகடி முன் குலை பதினெட்டுக்கு
விட்டு தீரும். தீடு மெங்கு புள்ளி குரை நோவு வீக்கம். செவ்வண்டு சிறங்கு முதல்
சிதறிப் போகும். சிதறி விடும் அரையாப்பு நெஞ்சில் நோவும் தீரும் கன்னேவு கபால

உதிரமுடன் வீக்கம் சுக சன்னி சிகா காத்தண்டரி கம்பிவிச்சோடும் முனைமாதா வெள்ளுள்ளி தயிலம் தன்னில் முசியாமல் பத்து நாள் பனைக்கருக்கு பகற் சன்னி கொண்ணாத்தாற் வாதம் ஐம்பதும் போம். பக்கவலி வாதமுடன் யேகும் பாரேன் பாரிந்த செந்தூர மிளகு சுக்கு பாங்கான வெங்காரம் அசமதாகம் நேரிந்தபடி முருக்கம் பட்டை சாத்தில், நினவாக லோக செந்தூரத்தைக் கட்டி சேர வைத்து நாற்பது நாள் நடந்து தின்ன கெரிசன்னி குத்து வாதம் நடுக்கு வாதம் மேக வாதம் மோக வாதம், அந்தி வாதம், சுரமே. காமாலை வாதமுடன் கொண்டல் வாதம் கல்லடைப்பன் சதையடைப்பன் நீரடைப்பான் உள் வலிப்பு, கிருகிருப்பு, நிலத்தில் வகையாக பலவிடகான் கொள் வாழுகில் நீங்காத கெற்ப விஷ நங்கிப் போகும்.

நீங்குமே விப்புருதி கண்ட . நீங்குமே விப்புருதி கண்ட கோற்வை
வாங்குமே விஷ பாகம் பாண்டுரோகம் மாறாத பெருவயறு நாபி சூலை
போங்குமுடன் தனையறிந்து செந்தூரம் கண்டால் போகுமே வியாதி பின் யெல்லாம் தீரும்.

~~[illegible]~~ சாதிலிங்கம் கட்டு :-

சாதிலிங்கம் கொண்டு வந்து பாப்பாசிசி கள்ளி பூவும் சாறும் சுருக்கு கொடுக்க மறுபடி எடுத்து நாரு சாமம் சுருக்கு கொடுக்க சாதிலிங்கம் கட்டு படும். இதை அநுபானம் அறிந்து சன்னி பதினொன்றுக்கு கொடுக்கவும்.

பிள்ளை யில்லாத பேர்க்கு நந்தியா வட்டம் அரும்பு அரைத்து முள்ளிக் காயளவு பசுவின் நெய்யில் சர்க்கரை கலந்து மூன்று நாள் கொள்ள பிள்ளையுண்டாம்.

வெள்ளை பாஷாண கட்டு :-

வெள்ளை பாஷாணம் வாங்கி வந்து சட்டியில் வைத்து சாரைப் பாம்பு கொழுப்பு சேர். 3/4 விளக்கெண்ணை சேர். 3/4 காட்டாமணக்கெண்ணை சேர். 3/4 இந்த இரண்டு எண்ணையும் சுருக்கு கொடுத்து பிறகு சாரைக் கொழுப்பு சுருக்கு கொடுக்க பாஷாணம் கட்டும் சகல சுரங்களும் தீரும். கை கண்டது.

சர்வ மந்தார காச்சலுக்கு எண்ணை :-

சாதிலிங்கம், காளகம், கஸ்தூரி, கோரோசினை, நல் பவழம் சாதிக்காய், பெருங்காயம், லவங்கப் பட்டை, கர்டு பறங்கி, சீரகம், பூண்டு சார், விஷ்ணு சார் திரிவால பூண்டு சார், கெருடன் கிழங்கு, மிருதார் சிங்கு, வெள்ளை பாஷாணம் திரிபாலை கடுகு ரோகிணி, சமானம் செய்து எண்ணையில் வடித்து தட்டிடை கொள்ளவும்.

குன்மம் எட்டுக்கு சூரணம் :-

சம்பங்கி பலகறை நீறு, சிறுகுண்டு வாழைப்பூ, ரோஜாப் பூ, தென்னம் வேர், நாவரிப்பு, வெட்டிவேர் நமாலி சாறும், பஞ்சலவணம், சீனிக்காரம், வெங்காரம் படிகாரம், சவுக்காரம், அக்கிரகாரம், ஆலான் விழுது சுட்ட சாம்பல், கள்ளி சாம்பல் சதுரக் கள்ளி சாம்பல் இலைக் கள்ளி சாம்பல், அவுரி சாம்பல், உறச்சன் மனி சாம்பல், ஆகாச தாமரை சாம்பல், நீர் மேல் நெருப்பு சாம்பல் திரிபாலை ஈறு மண்ணு ஒட்டடை கொடிவேலி சாம்பல் மாவுலிங்கம் சாம்பல் பெடலமருந்து பெருங்காயம் வாய் விளங்கம், ஓமம், வாளம், திரிகடுகு, களச்சிப் பருப்பு வகைக்கு பலம். இதை வெல்லாம் இடித்து வடி கொண்டு தேங்காய் குடுக்கையில் அடைத்துக் கொள்ளவும். களிப் பாக்களவு தேகம் அறிந்து கொடுக்கவும். அஷ்ட குன்மம், பெரு வயறு, நீராமை, நீர்கோவை, நிறகெண்டை வெப்பு வல்லா பாருவை வாலை யக்குனி சூதம் இது முதலான நோய் குன்மங்களெல்லாம் தீரும். கை கண்டது.

அரிதாரம் மெழுக்கு :-

அரிதாரம் வேண்டினது வாங்கி வந்து சுன்னத்தில் சுத்தி பண்ணி வெள்ளைக் குன்று மணிப் பருப்பு அரைத்து முகை செய்து குகைக்குள்ளே வைத்து அந்தக் குகை கொண்டு

அந்தக் குனிக் கொண்டு மூடி சிலந்தசிந்திர மூலம் அரைத்து கீழ் மேலும் மூடி சிந்தாமணிச் செலை அக்கிலும் கவசம் போலே கட்டி சா்மை ஓலை சுத்தி உமிக் காந்தலில் வைக்க மெழுகாகும்.

ஆரிதார பற்பம் :-

அரிதாரம் வேண்டினது வாங்கி வந்து பேய் முட்டி சாறு வார்த்து அரைத்து வில்லை செய்து உரலில் போட்டு மூன்று நாள் காயப் போட்டு செருப்படி சா குகையில் விட்டு புரசன் சாம்பல் கொட்டி மேல் சீலை மண் செய்து இரண்டு விரட்டியில் புடம் போட்டு எடுக்க பற்பமாம்.

சகல ரோகங்களுக்கும், சகல காசங்களும் தீரும்.

சுக்கு, சீரகம், மிளகும், ஓமம், பொன்னிறமாய் வறுத்து இடித்து சூரணம் பண்ணி வெருகடி பிரமாணம் கொள்ளவும். இச்சா பத்தியம்.

பெரும்பாடு புண்ணுக்கு :-

பொடுதலை பூ வாய்க் கொண்டு வந்து பேசாமல் பிடுங்கி வந்து சம்பரிசிக் கஞ்சியில் அரைத்து உள் கொள்ள கை கண்டது.

ரசக் குளிகை :-

ஊமத்தன் காயும், பூவும் கொண்டு வந்து புற்று மண் கூடப் போட்டு அரைத்து முட்டை போலே குகை பண்ணி அந்தக் குகை காய வைத்து எடுத்துக் கொஞ்சம் சாறு குகைக்கு குள்ளே விட்டு பிறகு காய விட்டு கற்சாப் பொடி குகையில் போட்டு முக்கழுஞ்சு சுரம் விட்டும கற்சா பொடி தூவி சீலை மண் செய்து குக்கில் போடவும் பிறகு எடுத்துப் பார்க்க குளிகையாம். பிறகு கருவூமத்தின் இலைச் சாற்றில் ஏழு நாள் தட்வி காய விட்டு --2x தட்வி அதிலே அலைச்சு ஏழு நாள் பிறகு வெள்ளிக் மிளகையில் வைக்க தம்பனமாம்.

x (not explained)

காந்தக்கட்டு :-

மலைக் குத்தாளையைத் துவைத்து அதுக்குள்ளே காந்தத்தை வைத்து இறுகக் கட்டி சீலை மண் செய்து புடம் வைக்க காந்தம் கட்டுப் படும். சோகை வியாதிகளுக்கும் மற்ற வியாதிகளுக்கும் ஆகும்.

துருசு சுன்னம் :-

நிச்சயமாகச் சொல்வோம் நிமலனுர் துருசு போக்கு
வச்சதோர் வங்கத்தாரி எடைக்கிடை திருத வாக்கு
மெச்சு மிந்திடைக்கு நல்ல வெடியுப்பு கூட கூட்டி
உச்சயம் வாய் நீராலே வுறலரைத்திடாயே.

வட்டமாய் யோட்டில் வைத்து வளையவே சீலை செய்து
திட்டமாய்க் குக்கிடத்தில் சென்றிட சுன்னமாகும்.
சுன்னத்தை வாய் நீராலே சுருக்கியே அரைத்துக் கொண்டு அன்னறை கட்டி துருசு
அப்பி யொற்வியில் போட்டு முன்னதோர் மூன்று நாளில் முழு வெண்மையாகும் பாரும்
பொன்னெத்த சீலை செய்து போட்டிடு காரையென்றே.

எனறத்தை எடுத்துப் பாரு யியலுள்ள சுன்னமாகும்
கன்றத்தைக் கண்டபோது கலியெல்லாம் நீங்கிப் போகும்
பன்றனை ரசத்துக் கால் பலவிடையாகவாக கொண்டு தாய் நிலமா பாகம்
என்னுரைக்கேன் கோடா கோடியும் மிக்குள்ளாக ஓடியே மங்க வேண்டாம் வைத்திடும் துருசு சுன்னம்.
தேடியும் கிடையாதப்பா தெருவெல்லாம் கிடக்குமோ தான் சொல்படியும் படித்து மென்று பத்திறம் படுத்தி வைய்யே.

சத்த அமுர்த மாத்திரை :-

ரசம் கெந்தகம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, ஏலம் விராகனிடை.உ, பச்சைக் கற்பூரம் விராகனிடை.உ, குங்குமப்பூ விராகனிடை.½ கோரோசனை விராகனிடை.உ,

அரப்பொடி விராகனிடை.உ, மலாக்கு கட்டை விராகனிடை.க, எல்லாம் விலாமிச்சன் வேர் இடித்த நீர் விட்டு ரவியில் விட்டு பிசைந்த அந்த தண்ணீர் விட்டு பிசைந்த சாம மரைத்து ஒரு விராகனிடை உருண்டை செய்து வைக்கவும். இதுக்கு அனுபானம் மேக சுரங் களுக்கு தேனும், திப்பிலியும் கூட்டி யிட மேகங்களுக்கு சீரகம் ஏலம் கூட்டி கூட்டி நீர் கடுப்புக்கு சீயமுகின்ற கிரந்திக்கு கழனி நீரில் தொடுக்க எரிவுக்கு தயிரில் கொடுக்க ரெத்த பிரமியத்துக்கு ஆவாரை அரிசியும், சீரகமும் இளநீரும் கூட்டி இடவும். கற்பூரம், ஏலம் சாதிக்காய் கிரம்பு மிளகு நன்றாய் பொடி செய்து தேன் விட்டரைத்து இருபத்தொ உருண்டை செய்து குறட்டிடைத்த சிலேட்டும சன்னி தீரும்.

<u>சங்காதி மாத்திரை</u>:-

சுக்கு, சுட்ட நீர் பலம்.க, மலாக்கீர சந்தனம் பலம்.க, இது இரண்டும் தண்ணீர்விட்டரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக்கொண்டு கல்கண்டு சர்க்கரை சீரகம் உருண்டை செய்து உய நாள் கொடுக்க நீரழிவு வெள்ளை நீரடைப்பு, சதையடைப்பு சகல மேகமும் தீரும். * ~~[illegible]~~ :-

<u>வாய்வுக்கு உருண்டை</u>.-

திரிகடுகு, நற்சீரகம், நாய்க் கடுகு, இந்துப்பு, பெருங்காயம் ஆக வகை வகைக்கு விராகனிடை.க, கடுகுரோகணி விராகனிடை.உ இது வெல்லாம் வறுத்து இடித்து எலுமிச்சம் பழ சாறு விட்டரைத்து தேத்தாங் கொட்டை பிரமாணம் இரண்டு வேளை கொள்ளவும். கட்டும்.

<u>ஷங்காதி மாத்திரை</u>:-

குரோசானி, ஓமம், சாதிக்காய், சாபத்திரி, அதிவிடையம், கிராம்பு, சமஎடை கூட்டி மேனிச் சாறு விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி பொன் முசுட்டை வேர் கசாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும். சகல கிராணி கழிச்ச லும் தீரும்.

மேக வெட்டையினால் வெள்ளை விழுந்தால் வாள மருந்து பொடி செய்து கோழி முட்டை.க, வெள்ளைக் கருவில் மத்தித்து கொடுக்கவும். மருந்து கொடுத்து ஒரு சாமம் மட்டும் தண்ணீர் தொடாமல் இருக்கவும். இச்சா பத்தியம். உப்பு, புளியாகாது.

<u>கலிக்க மாத்திரை</u>:-

காயம், அரிதாரம், கடிய வசம்பு, பேய்பீர்க்கு, சிறுதிப்பிலி, வெள் மிளகு, சேர்த்து உரைத்துக் கண்ணிலிடவும். ~~[illegible]~~

<u>வெட்டை வெள்ளை சங்கு பற்பம்</u>:-

சங்கு கொண்டு வந்து உடைத்து எலுமிச்சம் பழம் சார் விட்டு ஊற வைத்து மறுபடி எடுத்து கழுவி ஏழு சீலையில் உப்பு அரைத்து தடவி சங்கு சீலை மண் செய்து இரண்டு முழக் குழி கெல்லி புடமிட பற்பமாம். இதை பசுவின் பாலில் கொடுக்க பத்தியம். நாள் மாறு பத்தியம். யரு நாள் இதுக்கு தீரும் வியாதி மேக வெட்டை சல பிரமியம் ரத்த பிரமியம் உள்ளுருக்கி நீர்க் கடுப்பு, ரத்த நீர் நீர் காரை எருவு புண்ணிருக்கிறதும் தீரும். கை கண்டது.

<u>கிரந்தி வகை குலை வகை அரையாப்பு</u>:- not useful

தலக்க கெரந்தி, கொணை கிரந்தி, பதகெரந்தி கடிவிஷ கிரந்தி, கரும் குட்ட கிரந்தி, வெண் குட்ட கிரந்தி, அரி கிரந்தி, பொரி கிரந்தி, அழு கிரந்தி, கெற் கிரந்தி, சீழ் மூல கிரந்தி, கள்ளி புண் கிரந்தி, லிங்க புத்து கிரந்தி, வெடி குலை கிரந்தி அரை நீற கிரந்தி அண்ட பவுத்திர கிரந்தி, தேத்தாங்காய் கிரந்தி, தாமரைக் காய் கிரந்தி குட்டக் கிரந்தி, செம்ம கிரந்தி, மண்டைக் கிரந்தி, ஓடு கிரந்தி, எரி கிரந்தி அத்திக்காய் கிரந்தி, வாய் கிரந்தி, மூல கிரந்தி ஆக கிரந்தி ஙஉ வகை. ~~[illegible]~~

<u>சூலைக்கு பேர் வகை:-</u>

வாத சூலை; பித்த சூலை, பித்த சிலேஷ்ட சூலை, வெடி சூலை, பினி சூலை, மண்டை சூலை, எரி சூலை, தெற்ப சூலை, சத்தி சூலை, வறசூலை ஆக சூலை பத்து.

<u>அரையாப்புக்கு பேர் வகை:-</u>

கோவைக்கா அரையாப்பு வாழைக்காய் அரையாப்பு ஆமை அரையாப்பு, நெரி அரையாப்பு, மூலை அரையாப்பு ஆக அரையாப்பு.ரு.

கருங்குறவை அரி படி.ள, தண்ணீர் நனைய ஊற வைத்து பிறகு எடுத்து உரலில் போட்டு இடிக்கும்போது கோவைத் தண்டு சிறுக அரிந்து ஒரு பிடி கூட போட்டு இடித்த பிறகு ரசம் விராகனிடை.ய, கூட விட்டு மூன்று நாள் இடிக்கவும். நாலா நாள் எடுத்து புதுச் சட்டியில் போட்டு இளஞ் காச்சலா வைத்து எடுத்து கலசத்தில் வைத்துக் கொண்டு இந்த வியாதிகெல்லாம் ஒரு விராகனிடையாக ஒரு நாளைக்கு மூன்று வேளையாக மோரில் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் ஒன்பது வேளை கொடுக்கவும்.

வாய் சூலை கட்டிருல் மருந்து கொடுத்த எழா நாள் கருவேலம் பட்டை இடித்து பச்சை தண்ணீர் வார்த்து முழுகவும். இப்படி நாலு நாளைக்கு ஒரு தரம் முழுகி வரவும். பத்தியம் மோரும் சோறும் பச்சை தண்ணீர் வெள்ளாட்டு உப்பு கண்டம் கலைக் கீரை சுண்டை வத்தல் உப்பு, புளி பாக்கு வெத்திலை, எலுமிச்சம் ஊறுகாய் நெல்லிக்காய், ஈர வெங்காயம், மிளகு; மிளகாய், கீரைத் தண்டு, கருவாடு மீன் பசுவின் நெய் இது வகை கூட்டிக் கொள்ளவும். வயறு கடுப்புக் கண்டால் வெள்ளாட்டுக் கறி, உப்பு அவித்த தண்ணீர் குடித்து கறியும் தின்னவும் வயறு கடுப்பு நிற்கும்.

மஞ்சள் கருவேப்பிலை, கோழிக்கறி, பாகல் காயி பசினிக்காய் வாழைக்காய் இலை, கடுகு வெந்தியம், சீரகம், சந்தனம், புவடை ஸ்திரிகள் சேரலாகாது. நாற்பத்தஞ்சு நாளைக்கு ஆகாரம். சிறந்த சூலை அரையாப்பு கொடி வியாதி கழுத்து வியாதி இதெல்லாம் தீரும்.

<u>அரையாப்பு கரைய ரச பற்பம்:-</u>

காட்டாமணக்கு கிழங்கு ஒரு பாக்களவு தின்ன மூணாம் நாள் பாக்குடனே தின்ன கரைந்து போகும்.

<u>ரச பற்பம்:-</u>

ரசம் பலம்.உ, உப்பு படி.உ, புதுச் சட்டியில் கொட்டி செங்கல் தூள் மேல் கொட்டி கோழி முட்டை கருவில் மேனி அரைத்து குகை செய்து காய வைத்து அதில் ரசம் விட்டு மூடி சிறு பிரமாணம் துவாரம் செய்து இதில் வைத்த மேல் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து அடுப்பு மொழுகி தீப ஞாபகம் கொடுத்து கோழி அருந்த கனவதி முன்பா அடுப்பில் வைத்து ஒரு விறகா எரிக்க நாழிகை.ய, மும் எரிக்க எடுத்த மேல் சட்டியில் பற்றின சூரணத்தை சுரண்டி கொள்ளவும்.

<u>மேக வெட்டை வெள்ளைக்கு:-</u>

செம்பருத்தி இலை பிடுங்கி வந்து நீச்சு தண்ணீரில் பிசைந்து அரை மண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம்

<u>புண்ணு களிம்பு:-</u>

வேப்பம் பட்டை பலம்.க, மிளகு பலம்.வ நல்லெண்ணை படி. பிளாஸ்திரி செய்து போடவும் ஆறும்.

<u>பிள்ளைகள் மாந்தை எண்ணை:-</u>

பெருந் தும்மட்டிக்காய் சீவி பருப்பிலே அரிந்து விளக்கெண்ணெயில் போட்டு மூன்று நாள் வெய்யிலிலே வைத்து மறுநாள் எரித்து எண்ணை இறுத்துக் கொண்டு ஒரு துட்டெடை கொடுக்கவும். மாந்தம் போகும்.

<u>குன்மம் எட்டுக்கும் மூலன் செந்தூரம்:-</u> ஒரு சின்னப் பாளை வேலிப் பருத்தி குப்ப மேனி யிலை இது மூன்றும் சமனுக் கிள்ளக் கொண்டு இடித்த சாறு பிழிந்து

தேவையான கல்லுப்பு எடுத்து இந்த சாற் விட்டரைத்து வில்லை செய்து காய வைத்து ஒட்டிவிட்டு ஓடு மூடி சீலை மண் செய்து ஐந்தெருவில் புடம் போட்டு இப்படி மூன்று புடம் போடவும். தேனில் நெய்யில் கொடுக்கவும். மர்மம் எட்டும் தீரும்.

மூன்று கொற பொறசம விரை வேப்பயிற்கு முப்பிரண்டை ஓமம் மிக சமமாய் காக்கி குத்தி யிதை இரு நாழி தண்ணீர் விட்டு கொழு நீறு கசிய்ச்சி யிதை பாகல் நீரும் மிக்க பத்தி நின்றுக் கிருமி யெல்லாம் கும்பிட்டு சுண்டாக பயந்தை விற்க்கு புற பறப்பு நினைவு நீங்கி சுக்குமார்ம் முண்டில்வுரைக்க வரும் சொன்ன நிறைகையான தொடுருமாமே.

வெள்ளை பாஷாணம் சுத்தி பண்ணி மயில் துத்தமும் கூட சேர்த்து வமத்தின் சாற் விட்டரைத்து பயறளவு முண்டை பண்ணி சர்க்கரையில் கொள்ள பத்தியம். சீதள சுரம் போம்.

<u>பிள்ளைகளுக்கு அடி புறப்பட்டால் வழி முட்டானுலும் கறம்பு சிலந்தி</u>: -

அதிமதுரம் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். காசுக் கட்டி, களிப்பாக்கு, துத்தம், மருசு, எலுமிச்சம் பழம் சார் விட்டு பாரையெ காய விட்டு உரைத்து புண்ணின் மேல் போடவும்.

<u>வெள்ளைக்கு எண்ணெய்</u>: -

நிலக் கும்மிழ் பட்டை பலம்.க, நன்னாரி வேர் பலம்.க, மணத்தக்காளி வேர் பலம்.க, மொடக்கொத்தான் சார் படி. ½ சுக்கு பலம்.க, லவங்கப் பட்டை பலம்.க ஏலரிசி பலம்.க, ~~**~~ நல்ல சீரகம் பலம்.க, வெங்காயம் பலம்.கஉ, சமானமாய் சேர்த்து சட்டியில் வடித்துக் கொள்ளவும். இச்சா பத்தியம். இப்படி 9 நாள்

இடையில் உள்ள வேறு செய்தி கூறுவன விடப்பட்டன.

<u>முருதிக்கு எண்ணெய்</u>: -

ஆவாரன் இலையில் முத்தை வேக வைத்து காய விட்டு தண்ணீரில் அத்தி பசும் பால் வார்த்து எண்ணை எரிக்கவும். பித்த குடு மேகமெல்லாம் தீரும்.

<u>துவாசத்துக்கு</u>: -

நாவலை பட்டை பலம்.க, சுக்கு பலம்.க, கசாயம் வைத்து கல்கண்டு போட்டு கொடுக்கவும் தீரும். நாவலை பழம் அக்கலகாரம், அரிசி, திப்பிலி நாள் வருநாள பறனி தேனில் கொள்ளவும்.
(வேறு) வெங்காரம் பொடியும் தாளகமும் குகைக்குள் விட்டு புடம் செய்ய பற்பமாம்.

<u>சுவாச காசத்துக்கு லேகியம்</u>: -

not useful

ஆடாதோடை பட்டை, பூனைக் காசசருக்கு பட்டை, நாவலை பட்டை, முசுமுசுக்கை வேர் பட்டை, தேனில் நெய் லேகியம் ஆத்த முள்ளி விரை கல்கண்டு படுக்கும் போது ஓ அ் ஊ அ இது சொல்வது குளிகை அரைக்கும் போது சொல்வது ; நமாம சிவ சிவ கு ரு ஹ்ரீங்கார ஓங்கார நமசிவாயர் நமா இது சொல்வது வங்கு சிங்கு வருவாயா நமா. அகஸ்தியர் சாபம் நிவாறனை யாகுவாகா, அகஸ்தியர் சாபம் நிபாறனையாக

<u>விஷ்ணு சக்கர குளிகை</u>: -

ஆரி விந்து தாறம் லிங்கம் ஆன சத்தி நாவியும்
சோதி மூலப்பற்பமும் நாக்கு காந்தம் மனோசிலை
நீதி நன்பழ சாத்தரை நெருங் குண்டி நேரிடு
பாரி சத்தியா யிருந்த பாரளந்தார் சக்கரத்தி
லேர்ர் மனி தனித்திடு கடுகுடன் மிக்க தேமயித்த வீரில்
விட்டு வீறரைத்திடு பக்க வாய்வு விக்கல் சத்தி பத்த முண்டு
சன்னியம் கற்க் காச்சல் மிக்க சுவாசம் சகல வாய்வு அகலுமே.

அமுதாதி குளிகை :-

அருளினல் அமுர்த மென்னுங் குளிகை தன்னைச் சொல்லக் கேளும்: அதிமதுரம், செண்பகப் பூ, லவங்கமோடு, திருபருந்த கோரோசனை சாஸ்திர பேதி, சேர்ந்த வெட்டி வேர் கோஷ்டம், மாசி பச்சை, தருவினவே விலாமிச்சன் வேரு கூட்டி சரி சமமாய் விந்துண்டி சாற் விட்டாட்டி குரியதனல் முலைப் பால் தன்னில் பதைத்த வரும சிலமாந்தம் வாய் நீரில் ஊறல் எட்டும் தீரும்.

சாம்பிராணி தைலம் :-

சாம்பிராணி பலம்.ஐ, கொண்டு வந்து சட்டியில் நடுவில் சானம் வைத்து சுத்திலரப் பொடியை விட்டு சீலை மண் செய்து மேல் சட்டி தண்ணீர் விட்டு அடுப்பில் எரிவிட இந்த தண்ணீர் சுட பார்த்த பதம் இறக்கி பார்க்க தினத்தில் தண்ணீரும் தயிலமும் இருக்கும். முறைவே வாக்கி கொடுக்க சன்னி பதிமூன்றும் தீரும்.

சாம்பிராணி பற்பம் :-

சாம்பிராணி நாள் நடு சட்டியில் போட்டு சீலை மண் செய்து எரிய விட்டு எடுத்துப் பார்க்க பற்பமாம். மேல் சட்டியில் இருக்கும் சுரண்டி நெல் க.ளம் தேனில் கொள்ள சன்னி பதிமூன்றும் தீரும்.

சுக பேதிக்கு :-

சுக்கு பலம்.க, கடுக்காய் பலம்.உ, களிப்பாக்கு பலம்.ச இந்துப்பு பலம்.க, கசாயம். பஞ்சரத குளிகை மகத்து.ரு உஷ்ணம் தீரும்.

கப்பூரம் விராகனிடை,உ, சுக்கு, மிளகு, திப்பிலி, பறங்கி பட்டை, மரோசானி ஓமம், நல்ல சீரகம், தென்னட்டு சர்க்கரை, நிலப்பனைக் கிழங்கு இது வெல்லாம் வஸ்திர காயம் பண்ணி தேன் விட்டு அரைக்க கம்பி போலாகும். தேத்தான் கொட்டை பிரமாணம் கொள்ளவும். உஷ்ணம், மேகம் பிடிவாதம் வலி குதக வாய்வு தீரும்.

சுரம் அறுபத்தி நாலுக்கும் சன்னி மாத்திரை :-

அக்கி முக வாகனத்தின் சத்துருவை சேர்த்த ஆனை மேல் வருவாதும் தாரும் கூட்டி நத்தியோர் மாரியிடை கிடையே சேர்த்து நந்த, சோபாலன் தன் சாத்தாலாட்டி பத்தியாய் பயற வாய் சாத்தி உருண்டை செய்து பாங்குடனே சுர சன்னி தயிரில்லீய உத்திரே யீந்திடவே விச சுரங்கள் போகும். உத்தமனே ஓடி விடும் உகதுப் பாரே. பத்திய மில்லை. சகலமும் சேரும்.

பாஷாணம்; வீரம், மிளகு, காசிதம்பை சார்.

சண்டமாருத செந்தூரம் :- Compare this with printed books

பருப்பு மகனை மக்திருப்பா கடல் சூழ் புவி தாறுலகில் பெருகிய மானிடர்க்கு வந்த போக்கும் வியாதியுந்தான் மகிழ்ந்து அருந்த குரு முனி யோற மனதன்புடன் மானிடர் தன் பிறகே தெருந்தியதோர் அவிழ்தம் சண்டமாருதம் மென்றந்த செந்தூரம் சொன்னுற் வெகு சுருக்கு வெகு கொல்லையதாக வெகு சரக்கு முன்னுள் லிக்கைச் சாற் நல்ல முத்தின பட்டை கசாயம் ** வகை அது தன்னல் அரையாமல் அது தாக்கிடும் வெய்யிலில் காயாமல் காமனை ஒட்டில் வைத்து அது சந்த வாய் சீலை மண் செய்து மல் புடம் போட்டு காமாலை கன்றை பொக்கினி காலடி கண்டா போல திடம் போதரும் செந்தூரம் வெகு சீக்கிரம் செய்தொழில் மொறமை பூரம், கிச்சயிடையாம். அதில் போட்டிடும் லிங்கம் விணையிடையாம் வீரம் விணையிடையாம். அதில் மேலிய கெற்தி நிட்ட செந்தூரம் நிடையில் செந்தூரம் நிடையா அதில் சேர்ந்த சரக்கு அயிந்தையும் சுத்தி செய்து அறலுதனை வளந்து முன் அம்மியிலிலிட்டு இரு சாம வறன்ன பவள நிறம் அது வந்திடும் வுந்தன் மனங் குளிற சொர்னம் இதக்கீட்டோ வெகு கொக்கித்து கொக்கித்து சொல்றுகறேன் பிரமான மண்டிடை அன்பாய் போற்றி நவ குணம் மனமுருகியராய் காணு மென்று சொல்லி தாக்கும் பணவிடை செந்தூரம் நடுவாயி பனவெல்லத்தில் வைத்து நாவில் படாமல் முழுங்கி விட பருபாவி வியாதியெல்லாம் பின்னம் பாடுமல் ஓடும். பருத்துரைகள் சன்னி பதிமூன்றும் அதில் தாக்கிடும்

பிலி சுரங்கள் எட்டும் வேகு.

விரைவாகம் அதில் ஒத்தல் முடக்கு நடுக்குடன் அசதிகும் வாகம் புற்றை சிறந்தி வெடி சூலை, கண்டமில் மாலைகரம், நல்ல நரைகின்ற வன்மம் கை கால் முடைச்சல அபானம் மருந்து தெரியாமல் செய்தால் நல்ல தீட்டும் வியாதிக்கு தன்று செய்வேனக் கேளு தானே.

கற்பூர வள்ளி சாற் விட்டுவெடக்தேரி வேர் தான் சரியிடை கட்ட பத்தியம் இல்லை. தேங்காய் பால் கொள்ள கருவேலம் பட்டை சாற் கொப்பளிக்க.

<u>கெந்தக குரணம்:-</u> 23.2.63.

சுத்தி பண்ணின கெந்தகம் பலம்.க, சுக்கு பலம்.க, தானிக்காய் பலம்.க, நெல்லிமுள்ளி பலம்.க, கடுக்காய் பலம். பச்ச கட்லை பலம்.க, சர்க்கரை பலம்.உ வஸ்திர காயம் பண்ணி நெய்யில் தேனில் கொள்ள பத்தியம். தயிரும், நெய், பருப்பு, ஆட்டுக் கறி, கூட்டிக் கொள்ள உப்பு வருப்பு மேகம் கருமேகம் செம்மேகம், சிரங்கு, சூலை, சன்னி முதல் சொன்டு தீரும். நாள் யக நாள். உள நாள்.

<u>வாதருச்சுத லேகியம் செய்ய:-</u> not clear

அலக்கியின்னங் கொயி சாறு நாழி அதின் நடுவே கெம்பிற பழச் சாற் நாழி
வலக்கு சிறு வெள்ளளி கன் சாறு நாழி கொடியை விஞ்சி வென்னெச்சி சாறு
சலம் பிறவே காச்சி யதைக் நாலொன்றுக்கி சாதிக்காய் காயமது சூதம் கூட்ட
நல்முடைய கெந்தியுடன் யிந்தப்பு சேர்ந்து நாய்க் கடுகு மோதகமும் கடுகு கொள்ளேன்.

கொள் வது மொரன்கும் மஞ்சள், குக்கி வ்ராளம் குணமாக சுத்தி பண்ணிக் கூட்டிக் கொள்ளும் உள்ளபடி பழம் புளி போல் பதமே யாக்கி தானே விளாம் பழம் போல பதமெ உண்ண, உள்ளபடி குல்மம் எட்டும் சூலை வாகம் வுதிரமொடு பெருவயறும் ஒடும் தானே

ஒடுமடா வுஊனமுடன் வுடலில் வாதம் ஒரு கோடி குதகங்கள் வுதிர்ந்து போமே
போகுமே பத்தியமது ஐகறக் கேளும் வுச்சித மாபில மரிந்து சகலம் சேரும்
யிந்தபடி மண்டலந்தான் ஆனபோது ஒறக்கு கொடா காயமது ஒங்கும் பாரு..

ஒமம் பலம்.ங, நத்தை சூண்டி இது இரண்டும் அரைத்து எருமை தயிரில் கொள்ள பத்தியம். பகமறிந்து மண்டலங் கொள்ளவும். இது கை கண்டது.

<u>பூசிந்து பேதி:-</u>

ரசம் விராகனிடை.உ, கெந்தகம் விராகனிடை.ச நேர்வாளம் விராகனிடை.ரு, காட்டாமணக்கன் விரை விராகனிடை.உ, சித்தாமணக்கன் விரை விராகனிடை.ங, இது வெல்லாம் தேங்காய் பால் விட்டரைத்து முத்தின தேங்காய் திருவி போட்டு அதலல் அடைத்து எட்டு நாள் வைத்து உடைத்து அரைத்து வெங்கல பாத்திரத்தில் விட்டு வெய்யிலுக்கு திருக காய்ச்சி வைக்க தயிலம் விழும். அந்த தயிலத்தை வைத்துக் கொண்டு பூசிற்றில் தடவி முகர பேதியாம்.

<u>பூசினிக்காயி காயினம்:-</u>

நாமப்பா என்னை படி முக்கால் வாங்கி நலமான சின்னி சாற் கூந்தல் சாறே
காறுன செருப்படை சாற் கரு நொச்சி சாற் சமஸ்தான சிலந்தி நாயகன் பண்டு சாறு
வர்றுன சங்கம் சாற் சாட்டறணையின் சாற் வளமான வெள்ளருகு சாறும் கூட்டு
நாறுன இது வெல்லாம் கூட்டி சேர் நலமான வகைக்கு படி கால் தான் கூட்டு
ஆறுன சர்க்கருவைச் சொல்லக் கேளும் அப்பனே சீரகந்தான் பிறண்டு கூட்டு.

கூட்டடா கடுகுரோகணியுங் கூட்டுகூறுன வாது கறப்பான் பட்டை கூட்டு
வாட்டமா கண்டங் கத்திரியும் வளமான அன்னெரிஞ்சி பூண்டு கூட்டு
காட்டவே பாடக அறத்தை சுக்கு கனமான பறங்கி சக்கை குமளான் வேரும்
நாட்டவே யிது வெல்லாம் தளர்ய் பண்ணி நலமான வகைக்கு அரை பலமும் சேரே.

குத்தி என்னை:-

சேரடா என்னை தனில் கலக்கிக் கொண்டு சிறப்பான வேர்ளாளம் பலம் அரைதான் பொடித்துப் போடு
வாட்டடா நீர் சுண்டக் காய்ச்சிக் கொண்டு வன்மராக கறண்டி நிறை நாற்பது நாள் கொள்ளு
சொல்லடா பத்தியந்தான் யிச்சா பத்தியம் நலமானக் கொண்டு விட ஸ்ரீ நோய்க்கே.

கேளப்பா வீக்கமுடன் கொள்ளி சுட்டான் சூரியான வக்கிலெட்டும் கறப்பான்
ஆளப்பா லிங்க புத்து யோனிப் புத்து அய்யனே கிறந்தி வலி கொருக்காய் புண்ணு
நாளப்பா பித்தத்தால் எழுந்ததெல்லாம் நலமான வெடி கிறந்தி யிது வெல்லாம் போமே,

மெளித்தி என்னெய்:-

வெங்காயம் படி, சாற் எலுமிச்சம் பழம் சாற் படி.வ, ஆவின் பால் படி.வ, பசு முன்னை சாற் படி.வ, மாத்தக்காளி சாற் படி.வ, குமரிச் சாற் படி.வ, இள நீர் படி.வ, கொத்தமல்லி பலம்.க, சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, சாதிக்காய் பலம்.க, பனம் கல்கண்டு பலம்.க, சுக்கு பலம்.க, விளக்கெண்ணை படி.க, மெழுகு பதம். இச்சா பத்தியம். கை கண்டது. கத்தாழை சோத்தில் கடுக்காய் சாள் போட கன்னீராம். இப்படி செய்து குட்டுக்காக கொடுக்கவும். இச்சா பத்தியம்.

நாடி பிடிக்க சொல்வது:-

சித்திரை வையாசிக்கும் செங்கதி நிலையந் தன்னில்
வுத்ததோர் ஆனி மாதம் அற்பசி கார்த்திகைக்கும்
மத்தியானத்தில் பார்க்க மாகழி தை மாசிக்கும்
விந்த கன்கதிரோன் மேற்கே விழுகின்ற நேரந்தானே
நான்று பங்குனிக்கும் நளது கனல் ஆவணிக்கும்
வானமா புரட்டாசிக்கும் அற்த்த ரத்திரியில் பார்க்க
கோன்சம் நாடி மூன்சும் தெளியவே காறு மென்று
ஞானமா முனிவோர் சொன்னார். கைமுறை. வேக நாலே.

not required

அகஸ்தியர் குழம்பு:-

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், பொரிகாரம்; ம ஹேசிலை, திப்பிலி அரிதாரம், ஊசசசிலை;**திப்பிலி* கடுகுரோகிணி, கருஞ்சீரகம், வாளம், பச்சை வாளம் இது, குழம்பு செய்யறது.
சாம்பிராணி தைலம் தேன் பற்பம்:-

சாம்பிராணி தைலம்:-

அரை படி சாள் கொண்டு சட்டியில் நடுப்புற வைத்து சானம் வைத்து அதின் மேலே கிண்ணம் வைத்து இந்தசாள் சுத்தி போட்டு சீலை மண் செய்து புடமிட தயிலமாம். இந்த சாள் சட்டியில் போட்டு சீலை மண் செய்து புடமிட்டு மேல் சட்டி பருமப் பற்பமாம்.

சன்னி சுரத்துக்கு:-

கெற்ப மாந்தே, வெள்ளைப் பாஷாணம், வீரம், மிளகு, காசிதும்பை, சாற் விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து கொள்ள தேன் அனுபானம். சன்னி சுரம் போகும். திப்பிலி தாயிவாளம், பெருங்காயம், கடுகுரோகணி, துளசி சார், முசுமுசுக்கை, சாற்பாகை சாற் அரைத்து உருண்டை செய்து நல்ல தண்ணீரில் கொள்ள மாந்தம் போம்.

மேகத் தென்னை:-

புண் மேகம், சொரி மேகம், படற் மேகம், களி மேகம் இதுகளுக்கு மேல் பூசு எண்ணை:-

பிறம்மதண்டு காசி சாற் படி.க, நல்லெண்ணை படி.க, இதில் கஸ்தூரி மஞ்சள் சார் போக அரிசி அரைத்து இறக்கிற பதத்தில் போட்டுக் காய்ச்சி எடுத்து உடம்பெல்லாம்

நுனையில் இட்டு சீக்காய் அரைத்து தேய்த்து முளிக்க மோருஞ் சாதமும் சாப்பிட மேல் கொண்ட மேகம், சிரங்கு, கரப்பான், முதலானதும் தீரும். உள்ளுக்கு கொடுக்க விளக் கெண்ணெயில் இந்த சாற் விட்டு எரித்துக் கொடுக்க மட்டு மட்டாக் கொடுக்க தயிர் நெய் மோர் சேர்த்துக் கொள்ள மேகம் தீரும்.

மேகத்திற்கு :-

தலியான பூசனிக்காய் கொண்டு வந்து சோறு எடுத்து அதில் சிறு லவங்கப் பட்டை சுசகசாபான உப்பு வெல்லம் இது நாள் செய்து ஆக்கிக் கடைந்து உப்பு போடாமல் சாப்பிட மேகம் மேக வாய்வு குடுகள் தனியும்.

மேக குடு தனிய :-

செம்பருத்தியிலை குத்து பிழிந்து வந்து நீச்சத் தண்ணீரில் காய்ச்சி ஒரு மண்டலம் கொள்ள மேக குடு பித்த குடு தனியும். இச்சா பத்தியம்.

இடையில் சில ஏடுகள் வேறு செய்தி கூறுவன பிரதி செய்யாமல் விடப்பட்டன.

பேய் நாய் கடிக்கு : பேய் நரி கடிக்கு :-

புலித்தோல் சுட்டுக் கொண்டு வந்து வெல்லமும் மஞ்சளும் ஊமத்தையிலை சாற் வார்த்தரைத்து பன்னைக் காயங்கு கொடுக்கவும். இருபது பானை தண்ணீர் தலையில் விடவும்.

இதுக்கு மந்திரம் :- ஆண் நாயும், பெண்ணும் கடிச்சபடி பாரீர் நாச்சியாரும் நாயகனும் இறந்தபடி பாரீர் குதி குதி சுவாமி யானை குதி சுவாகா. கடிச்சவுடனே கடிச்ச வாய்க்கு செம்புத் தகடு வைத்து இட்டு தக்காளியாவதும் வைத்து கட்டவும் இது தீரும்.

பெரும் பாட்டுக்கு மருந்து :-

கத்தரிக்காய் கொண்டு வந்து குடல் விரையெல்லாம் வாங்கிப் போட்டு அதுக்குள்ளே தேங்காய் திருவி அது மேலே சீரகம், மிளகு வைத்து வேகப் போட்டு எடுத்து தின்னவும் குணமாம்.

தடை வாளைக்கு மருந்து :-

ஆகாச கெருடன் கிழங்கு கொண்டு வந்து பெருங்காயமும் வசம்பும் கொண்டு வந்து தண்ணீர் விட்டு அரைத்து வீக்கத்தில் பூசவும் தீரும். செம்போத்து எச்சம் சோறுடன் பிசைந்து இட கோழி சாகும்.

நேத்திர வாய்வுக்கு மருந்து :-

வெள்ளெருக்கம் பால் சீலையில் ஏழு தரம் பிடிச்சு காய வைத்து வத்தியாக்கி எருமை நெய்யில் தோவைச்சு வத்தி பண்ணி விளக்கேத்தி புர ஓடு கவுழ்த்தால் மையாகும். அந்த மையை எடுத்து கண்ணுக்கு இட நேத்திர வாய்வு கண்ணி முட்டுகிறது நிற்கும்.

கிருணி மருந்து :-

கோடாசாலை திறமூலம் கொண்டு வந்து தண்ணீர் வார்த்தரைத்து எண்ணெயில் குழைத்து கீழும் மேலும் வெண்ணை தடவி முழுகவும். மோரு குடிக்கவும். தயிர் வார்த்துண்ணவும். ஆவாரம் வேர்ப் பட்டை கொண்டு வந்து தழிநீர் வார்த்து அரைத்து தப்பு குழம்பாய் அதுக்கு மந்திரம் சொல்லி கொடுக்கவும். கிருணிக் கழிச்சல் நிற்கும்.
நாம நமோ பகவதி புவநேஸ்வரி கபலேஸி அவதரி ருஉஞ்சசதரி அவதரி ருஉஞ்உசு சதிஉஞ் சதிட பிட கிறகனி விகாறனி சருவதி அவி விதம் பரி கிரி கிரி சுவாகா
இந்தப்படி மூன்று தரம் சொல்லிக் கொடுக்கவும்.

நீரழிவுக்கு மருந்து :-

தண்டு சிவந்த நாயுருவியும் சிவந்த சிறுகீரையும் பசுவின் பாலுடனே கொடுக்கவும். தொட்டாலையை சமூலம் கொண்டு வந்து அரைத்து மூன்று நாள் கொடுக்கவும்.

வாழை வெட்டி போட்டு அடி தண்ணீர் கொண்டு வந்து குருவருகு அரிசியும் பழம் புன்னைக்கும். பொன்னாங்கண்ணியும் கொண்டு வந்து புட்டாகப் பண்ணி பசுவின் நெய் வார்த்து பிசைந்து தின்னவும் தீரும்.

<u>இருக் கடுப்புக்கு மருந்து</u>:-

எருமைத் தயிரில் கருவேலம் பட்டை நசுக்கி பிசைந்து கொடுக்கவும் குணமாகும்.

ஆனை வணங்கி வேர் கொண்டு வந்து நீ ளாக்கி காத்து வாக்கிலே பிடிக்கவும் சக்கம் வரும்.

<u>வயிறு இருமலுக்கு</u>:-

வெள்ளரி விரையும் எலிப் புழுக்கையும் அரைத்து தீழ் வயத்தில் கடவ குணமாகும். சதிரக் கள்ளி காப்பு கட்டுகிறதுக்கு திங்கள் கிழமை நாள் காப்பு கட்டி செவ்வாய் கிழமை நாள் ஏர் பலி கொடுத்து அந்த சதிரக் கள்ளி வேர் பிடுங்கி வந்து நாழி பட்டை பொடியாக்கி இரு விரல் பிரமாணம் வெள்ளாட்டு நெய்யில் குழைத்து முழுங்க வீசி இருமல் தீரும். ஏழு நாளில் தீரும்.

<u>வயிற்று விப்புருதிக்கு மருந்து</u>:-

முக்கின சாட்டணைக் கிழங்கு சர்மூலமும் அரைத்து அடையாகத் தட்டி ஓட்டில் காய வைத்து ஈரம் உலர்ந்த பிறகு சிலந்தி மேலே போட்டு அதின் மேலே சீந்தி இலை போட்டு கட்ட தீரும். வயத்தில் நிலக் கடம்பல் கொண்டு வந்து இள வெந்நீரில் அரைத்து கொடுக்க உடைந்து சீவு கட்டியாய் விழும். இதுக்கு பத்தியம் கவுச்சு புளியாகாது.

<u>பெரு வயத்துக்கு மருந்து</u>:-

இரு நாழி நுனி மஞ்சளும் இரு நாழி கடுக்காயும் இந்த இரண்டும் காய வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி எட்டு நாளைக்கு கொடுக்கத் தீரும்.

<u>பூப்பட்ட கண்ணுக்கு</u>:-

சிறு புள்ளடியும் முலைப்பாலில் அரைத்து தலைக்கு வார்க்கவும் கண்ணி போடவும்.

<u>பத்ச குன்மத்துக்கு மருந்து</u>:-

உத்தாமணிக் கொழுந்தும் மிளகும் அரைத்து கொட்டைப் பாக்களவு இப்படி பத்து நாளைக்கு தின்னவும். சிறு தும்மட்டிக் காயும் சதிரக் கள்ளியும் கல்லுப்பும் ஆடு தின்னாப் பாலையும் எல்லாம் பக்குவத்துடனே புடம் வைத்து காய வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி பத்து நாளைக்கு தின்னல் சொஸ்தமாம்.

<u>எட்டி தின்ன பேர்க்கு</u>:-

not reqd

பருத்தி வேர் அரைத்துக் கொடுக்க கொல்லை பல்லி பிடிங்கி வந்து பொடி செய்து கொடுக்கவும். சோறு செரிக்கும். நாவல் பட்டை அரைத்து கொடுக்கவும். எக்கு அரைத்துக் கொடுக்கவும். தாமரை கிழங்கு அரைத்து கொடுக்கவும். ஒரு தலைக்கு பொன்னாங்கண்ணி இலையும் சிறு குறிஞ்சான் இலையும் முலைப் பாலில் அரைத்து நசியமிட காளாத் பேற்கு சனியில் வட்டி பத்தி பிடிக்கவும். பட்டை பூச்சி நரித் தாமரை வேர் பிடுங்கி வந்து வாயிலடக்கிக் கொண்டு மருந்து வயத்து மார்பிலே உரலிடிக்க நோகாது. நரிப் பயத்தன் இலை கொண்டு வந்து வேக வைத்து நன்றாய் பிசைந்து கருப்புட்டி தின்று போட்டு இந்தச் சாறு குடிக்க வயத்திலிருக்கப் பட்ட பாம்பு விழும். எலி

<u>எலிகடி இறப்புக்கு மருந்து</u>:-

குக்கு செவ்வல்க்கிக் கிழங்கு கொண்டு வந்து எருமைத் தயிரில் குழப்பி குடிக்க எலி கடி இறப்பு தீரும்.

கை கால் முடங்கின வாதத்துக்கு:- அருகன் பிஞ்சு சார் நாழி, குப்ப மேனி சார் நாழி,

சதிரக் கள்ளி சாறு நாழி, வேப்பெண்ணை உரி., பசுவின் நெய்.உரி, குங்கிலியம் உரி வெங்காயம் சார் உரி, வசம்பு மிளகு கூடக் கொதிப்பித்து மேலில் பிடிக்கவும் தீரும்.

<u>ஊது காமாலைக்கு மருந்து</u> :-

வெப்பாலை பட்டை நீரில் ஊறவைத்த ஆமணக்கெண்ணை உள்ளி வசம்பு புட்டு இந்துப்பு, பெருங்காயம் கட்டி எண்ணை பண்ணி நக்க முன் சொன்ன வாதம் தீரும். கருப்பங்கட்டு மூத்திரம், வெள்ளுள்ளி மிளகு, மஞ்சள், வெல்லம், நல்லெண்ணை இது வெல்லாம் கலந்து அரைத்து உள்ளுக்குக் கொள்ளக் காமாலை தீரும்.

<u>மருவுக்கு மருந்து</u> :-

பாம்பு நடந்து போன மண் விநாயகர் கோயில் சன்னதியில் தடவ மருவு போம்.

<u>மயிர் வளர மருந்து</u> :-

ஆலான் விழுது மோரில் அரைத்து முழுகவும். முசுமுசுக்கை வேர் பொன்னுங் கண்ணி வேர், நீர்ப்பூலாவேர் இந்த வகை மூன்றும் எலுமிச்சங் காயளவு, இள வெந்நீரில் அரைத்துக் கொள்ளவும்.

<u>பித்தத்துக்கு மருந்து</u> :-

பிரும் வடக்கே போற வேர் பட்டை வெட்டி வந்து அதைக்கு இரு நாழி மோரில் ஊறப் போட்டு மத்த நாள் நாழி மோர் இருத்துக் கொடுக்கவும் பித்தம் தீரும்.

<u>சொத்தை பல்லுக்கு மருந்து</u> :-

சாறுவேளை வேர், சதைத்து நல்லெண்ணையில் பிசறி வலிக்கிற பல்லு மேல் வைத்து தாடையிலும் தடவி மறு பாகமாக காலில் தடவி எதிர் வெய்யிலில் இருக்க புழு புறப்பட்டு விழும்.

<u>நீர் பாயுகிற மருந்து : உள் காமாலை, வறகாமாலை மருந்து</u> :-

இரண்டு படி மிளகு, ஒரு படி சுக்கு, வெள்வெங்காயம், திரி ஒரு படி அரப்பொடி முட்டி ஒரு படி எலுமிச்சம் பழம்.உய, நல்லெண்ணை உழக்கு கரிசிலாங் கண்ணிச் சார்.உ, இது வெல்லாம் பொடியாக்கி எலுமிச்சம் பழத்தில் அடைத்து கலசத்தில் இட்டு புதைத்து எட்டு நாள் எடுத்து கொட்டைப் பாக்களவு கொள்ளவும். பதினெரு நாள் கொள்ளவும். கவிச்சு புளிப்பு உப்பு ஆகாது.

<u>சூலைக்கு மருந்து</u> :-

விழுதி இலைச் சாறு உழக்கு, நல்லெண்ணை உழக்கு இது கலந்து குடிக்கவும். சூலை தீரும்.

<u>உலைப் புத்துக்கு மருந்து</u> :-

ஆவாரம் இலை பிட்டிட்டு புண் வாயிலே கட்ட தீரும். பசுவின் கோமியம் மூன்னி இடித்து வந்து அடுப்பிலே வைத்து உரியாக காய்ச்சி உலையிட தீரும்.

<u>பசி தாபத்துக்கு மருந்து</u> :-

ஒரு வெள்ளைப் பூண்டும் ஒரு சுக்கும் ஒரு காசு நிறை மிளகும் சாட்டறணை வேர் இதுகளெல்லாம் பச்சை அரிசியிலே அரைத்து கூழாய்க் காய்ச்சி குடிக்கவும் மூன்று நாள் இந்தப்படி பண்ணி சாப்பிட்டால் வெகு பசியுண்டாகும்.

<u>காமாலைக்கு</u> :-

வெள்ளைப் பூண்டு மிளகு பலம்.உ, சீரகம் பலம்.உ, கடுக்காய்.உரு, சுக்கு பலம்.க, அசமதாகம் பலம்.க, கருஞ்சீரகம் பலம். இருவங்கிலியம் பலம். அரப்பொடி பலம்.உ, சீரகம், பெருங்காயம் பலம்.வரு இந்த மருந்து எல்லாம்

இடித்த சூரணம் பண்ணி புதுக் கலசத்திலே எலுமிச்சம் பழம் கொண்டு வந்த கிவாய் போலே அரிந்து அந்த சூரணத்தை அதிலே விட்டு நல்லெண்ணெ விட்டு மூன்று நாள் புதைத்து வைத்து நாலா நாள் எடுத்து காலத்காலே எடுத்து வேளைக்கு ஒவ்வொரு பழம் கொள்ளவும். புளிப்பு கவுச்சுவுப்பு காயப்பு ஆகாது.

சூலைக்கு மருந்து :-

நரிப் பயத்தன் சகு மூலம் பிடுங்கி வந்து உரலிலே தலைத்து பசுவின் பாலிலே கலந்து கொடுக்கவும் சூலை தீரும்.

பாண்டுக்கு :-

சர்க்கரை பலம். மிளகு பலம்.க, திப்பிலி பலம்.க, சீரகம் பலம். கடுக்காய் பலம். நெல்லிமுள்ளி ஒரு பிடி இது வெல்லாம் பொடி செய்து பழங் கிட்டம் தண்ணீரில் ஊறப் போட்டு மக்கா நாள் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி கலந்து விட்டு கொண்டு பானையை தோண்டி புதைத்து வைத்து பத்து நாளைக்கு பிறகு எடுத்து நாள் ஒன்றுக்கு மூன்று விரல் கொண்ட பிரமாணம் கொள்ளவும். இரண்டு வேளையும் உய நாள் கொள்ளவும். கவுச்சி, புளி, புகை தள்ளவும்.

உள் மூலத்துக்கு :-

முள்ளங்கி கிழங்கு அரைத்து வெறு வயத்தில் ஒரு மண்டலம் முழுங்கவும். கறிவிக் கொழுந்தும் அரிசியும் அரைத்து எண்ணெயில் அடை சுட்டு தின்னவும். உள் மூலம் வியாதி போகும். இது கை கண்டது. இரவே வாகடம்.

****

முற்றும்

****

சு.ச: 23.2.63.

Verified and Compared with the original
Sundaramurthy
4/4/63